# சுவைத்திரள்

சுவை : 1 ★ 1994 பெப்ருவரி - மார்ச் ★ திரள் : 5 விலை 10/-

மீன்பாடும் தேன்நாட்டின்

நகைச்சுவைப் பல்கலை ஏடு



இராமர்:- பிராணநாயகி அதோ போகும் அந்த அழகிய மானை உனக்காகப் பிடித்துத் தரட்டுமா?

சீதை:- பிராணநாயகா அதன் வரலாறு எனக்குத் தெரியும்
அது மங்கள முனசிங்கா வளர்த்த தெரிவுக் குழு மான்!

இராமர்:- ? ! !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மூக்குக் கண்ணாடி ஸ்தாபனம்
## ( நடமாடும் சேவை )

நீங்கள் மூக்குக் கண்ணாடியை பெற்றுக் கொள்வதற்கு பிற ஊர் பிரயாணம் செய்யத் தேவையில்லை, நிரந்தரமற்ற மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்களை நம்பி ஏமாறவும் தேவையில்லை. 15 வருடமாக மட்டக்களப்பிலேயே நிரந்தரமாக மூக்குக் கண்ணாடிகளை விநியோகித்து வரும் எங்கள் ஸ்தாபனம் உங்கள் வசதி கருதி நடமாடும் சேவை ஒன்றினை நடாத்துகின்றது. இதில் உங்கள் கண்களை இலவசமாக பரிசோதனை செய்து 7 நாட்களில் ஒரு அழகிய மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**வாடிக்கையாளருக்கு உத்தரவாதம், விற்பனைக்குப் பிந்திய சேவை, தவணை முறையில் பணம் செலுத்தி பெறும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது,**

## இடங்கள்:-

1. **கல்முனை வைத்தியசாலை பிரதி திங்கள் தோறும் 9. 00 - 1. 00 மணி வரை**
2. **மருதமுனை பிரதி திங்கள் தோறும் 2. 00 - 4. 00 மணி வரை**
3. **கல்லாறு Y. M. C. A. பிரதி திங்கள் தோறும் 4. 00 - 5. 00 மணி வரை**
4. **வாழைச்சேனை 119 A, பஸ் நிலையம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

**நிரந்தர முகவரி:- 75 B, முனை வீதி,**
**மட்டக்களப்பு:**

---

## உங்கள் அரைவைத் தேவைகட்கு நாடுங்கள்

# ஜெகத் அரைவை ஆலை

**இல: 05, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-9-6-1994

காலைக்குரல்

# சுவைத்திரள்

## பூனைக்கு மணி கட்டுவது யார் ?

அமெரிக்காவில் நடைபெற்ற சம்பவம் இது. ஒரு குடும்பம் பிற்போக்கான கிராமப்புறம் ஒன்றுக்குச் சுற்றுலா போனது. அவர்கள் அந்தக் கிராமத்தில் தங்கிச் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரெனக் கைத்துப்பாக்கியை எடுத்த மகன் தாய், தந்தை, தங்கை ஆகியோரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். அதிக நேரம் சென்று பொலிசார் வந்தனர். குற்றவாளியை விசாரித்தனர். அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டது மாத்திரம் அன்றி, இன்று 'திறில்' ( Thrill ) எதுவும் இல்லாமையால் இந்த வேலையைச் செய்ததாகக் கூறினான்.

இன்று உலகம் சிறுகச் சிறுக மனிதாபிமானம் இல்லாமையால் அழிந்து கொண்டிருக்கின்றது. ஒழுக்கக் கேட்டினால் எயிட்ஸ் அழித்துக் கொண்டிருக்கின்றது. பிரச்சனைகளைத் தெரிந்தும் தீர்ப்பதற்கு இரும்புத் தைரியம் இல்லாத தலைவர்களால் போர்த் தளபாடங்கள் மானிடத்தை அழித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் மனித அழிவின் முடிவிலும் போர்த்தளபாடங்களையே நாடுகள் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. '' போரே நீ போ '' என எத்தனை எழுத்தாளர்கள் எழுதினும் ' போரே நீ வா '' என்ற தத்துவமே உலகை நாடி வருகின்றது. உலகம் எங்கும் கண்ணிவெடிகள் புதையுண்டு உள்ளன.

சின்னஞ்சிறிய இலங்கையில் பிரச்சனைகள் திரும் என எதிர்பார்த்தோம். ஆனால் மீண்டும் மீண்டும் போரே தொடர்கின்றது. இன்று நடக்கும் உள் நாட்டுப் போரை நிற்பாட்டினால் மூன்று மாவலித் திட்டங்களை நிறைவேற்றலாம் என்பார் ஒரு அரசியல்வாதி. யாழ்ப்பாணம் கிரிக்கெட் மைதானம் அல்ல அங்கு சாவோரும் எம்மக்கள்தான் என்பார் ஒரு அரசியல்வாதி. ஆயினும் அப்பாவி மக்கள் மீதான வான் வீச்சுக்கள் தொடரவே செய்கின்றன. பூனைக்கு மணி கட்டுவது யார் ?

ஒரு புறத்தில் அகதிகளின் பெருக்கம் மறுபுறத்தில் ஆயுதப் பெருக்கம். இவற்றையெல்லாம் கூட்டினால் வருவது பணவீக்கம். மேலாதிக்கம் இல்லாத அரசு ஒன்றே இதனைப் புரிந்து கொள்ளும் வல்லமை வாய்ந்தது ! புதுவருடத்திலாவது எமக்கு வழிகாட்டும் தலைவர்கள் இருந்தால் இதனைச் சிந்திக்க வேண்டும்.



புது வருடத்தில் உழைக்கும் பாட்டாளிகளும் இம் மண்ணும் வாழ்க எனச் சுவைத்திரள் வாழ்த்துகின்றது.

( ஆ + ர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் நெஞ்சம்



சுவைத்திரள் தொகுப்பாளர் அவர்களே......

மாதம் ஒரு முறை வரும் சுவைத்திரளைத் தவறாது படித்தேன். இருந்தும் தை மாத இதழ் மிகவும் சுவையாக இருந்தது.

- எஸ். சபேசன் -
கோட்டைக்கல்லாறு

சிரிப்பில் சிந்தனையை அள்ளித்தரும் சுவைத் திரளே! உன் தைமாத இதழை சுவைத்தேன். சுவை அபாரம் ''சவாரித்தம்பர் ஒரு விமர்சனக் கண்ணோட்டம்'' தத்துவங்கள் பலதைத் தந்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். மாதர் தன்னை மடையரென்று ஒதுக்கித்தள்ளும் இன்றைய யுகத்தில் இது பாராட்டக் கூடிய ஒரு முயற்சி சுவைத்திரளால் சிரிக்க வைக்க மட்டுமல்ல சிந்தனை முத்துக்களைத் தொகுத்துத்தரவும் முடியுமென்பதற்கு சிறந்த உதாரணம்.

முகமட் ஜஹானி
இல. 90, கபுறடி வீதி,
காத்தான்குடி.

அன்பின் சுவைத்திரளுக்கு.........

கடந்த ஜனவரி இதழ் (பொங்கல் இதழ்) கண்டேன். அழகாக அமைந்திருந்தது. கருடனின் பதில்கள் திடுக்கிட வைத்து விட்டன. ''பொங்குமோ இந்தப் பொங்கல்'' என்ற எதிர்மாறான இரண்டு கவிதைகளையும் அவற்றிற்கு ஏற்றவண்ணப் படம் வரைந்தவர்களுக்கும் என் தனிப்பட்ட பாராட்டுக்கள்.

மேலும், ''பேசுவது போராட்டம்தான்! மௌனமாக இருப்பது ஏன்'' என்ற கட்டுரை சுவையாக மட்டுமல்லாது என் மனதினையும் வெகுவாகக் கவர்ந்து விட்டது.

மற்றும், டாக்டருடன் சிரியுங்கள் என்ற பகுதி உண்மையிலேயே சிரிப்பு வராதவர்களின் முகத்திலேயே சிரிப்பு வரக்கண்டேன். அடுக்குமொழி அண்ணாச்சாமி சுவை ..... சுவை. திக்கவயலின் சவாரித் தம்பர் ஒரு கண்ணோட்டம் பிரமாதம். த. அன்பரசி எமக்குத்தந்த சிரிகதை (பரமு மாமாவுக்கு '' சைட்றூம் ! '') ஹி .. ஹி ... வியக்க வைத்து விட்டது. சுவைத்திரளே ! இப்படியான பல சுவையான செய்திகளைச் சுமந்துவரும் நீ ஒவ்வொரு நாளும் வந்தால் எப்படி இருக்கும்?

மரூத் அகமத்
90, மத்திய வீதி,
காத்தான்குடி.

மறைந்து போன சஞ்சிகைகட்கு உண்டான கதி ... சுவைத்திரளுக்கு வரக்கூடாது. நடத்து... நடத்து... எனக் கேலியாக எழுதிய சென்ற இதழ்க் கடிதத்துக்குப் பதிலாகவே இக்கடிதத்தை வரைகின்றேன்.

கல்லடி மூர்த்தி
18, விபுலானந்தா வீதி.
மட்டக்களப்பு.

சென்ற இதழ் சுவைத்திரள் (4) கண்டேன், அட்டை படுமோசம். அட்டை என்றால் அட்டையாக இருக்கவேண்டும். கவிதை, பொன்மொழிகள் இடம்பெறுவது பொருத்தம் இல்லை. கேள்வி பதில், கொழும்பு டயரி சிறப்பு. மொத்தத்தில் மட்டுநகரில் இருந்து வெளிவரும் யாழ்ப்பாண இதழ் என்ற மனப் பதிவையே இவ்விதழ் ஏற்படுத்தி உள்ளது. இறுதியாகப் பட்டுக்கோட்டையின் வரிகள்'' சொல்லுறதைச் சொல்லிப்புட்டன்; செய்யிறதைச் செஞ்சிடுங்க நல்லதுன்னாக் கேட்டிடுங்க கெட்டதுன்னா விட்டிடுங்க

இரா. நாகலிங்கம் அவர்கள்
( அன்புமணி )

ஆனை முக்கியது கண்டு அடுக்களையும் முக்கியதாம். சரி நிகர், தினமுரசு போன்ற பெரிய சொம்பனிகள் பத்திரிகை நடாத்துவது கண்டு நீயும் ஏதோ எழுந்துவிட்டாய்! உனது சிரிப்புப் பத்திரிகையைக் கிலோக்கணக்கில் விற்று அமைதி காணும் நாளை விரைவில் காண்பாய் சிரியோ......

மு. எழில்வதனன் வாழைச்சேனை
( முழு விலாசம் இல்லை )



ஒருத்தி : நீ ஏன் உனது கணவனை விவாகரத்துச் செய்தாய் ?

மற்றவள் : கல்யாணத்துக்குப் பிறகு தான் நப்பர் பொருத்தம் இல்லையென்பதைக் கண்டு பிடிச்சன்.

- நித்தியவல்லி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கா. வீரசிங்கம் கொழும்பு - 07

கே. எந்த நாடு சமசந்தர்ப்பம் இல்லாத நாடு?

ப: பக்கத்து வீட்டில் இறைச்சித்தூள் இடித்துச் சத்தம் சேட்கும் போது அடுத்த வீட்டில் பட்டினி கிடக்கும் நாடு.

★

நா. சாந்நி வவுனியா


கே: தலைவலிக்கு மறுபெயர் என்ன?

ப: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி

★

கா. இருதயராஜன் சின்னஊறணி

கே. அதிர்ஷ்டசாலியான மருமகன் யார்?



ப. மாமனார் சட்டம்பியாராக வராத குடும்பத்தில் கல்யாணம் செய்த மருமகன்

★

மு. தங்கவேல் களுதாவளை

கே. ஒரு ஆணின் முன்னேற்றத்துக்கு ஒரு பெண்ணின் தியாகம் பின்னே உள்ளது. இதனை ஏற்பீரா?

ப. ஒரு பெண் அல்ல அவ்வாறு பல பெண்கள் உள்ளார்கள். ஓர் ஆணின் முக விலாசத்தை மறைத்த பெண்களும், ஓர் ஆணின் பின்னே நின்றார்கள்; நிற்பார்கள் என்பதையும் நீர் உணர்வீரா?

★

வி. சாந்தன் பெரிய கல்லாறு

கே. உம்மைக் கவர்ந்த சிரிப்பு நகைச்சுவை ஒன்று சொல்க?

ப: உப்புத் தண்ணியில் வளர்ந்த மீனுக்குக் கறிச் சட்டியில் உப்புப் போடுவது எனக்குச் சிரிப்பை வரவழைக்கும்.

நா. வரதராஜன் கல்லடி

கே: அந்தக் காலத்தில் உடன்கட்டை ஏறும் பெண்கள் இருந்தார்கள்! இப்போது......?



ப: இப்போது உடன் கட்டை எடுக்கும் பெண்கள் நாட்டில் இருக்கவே செய்கின்றார்கள்.

★

ரா. பூபாலபிள்ளை வாழைச்சேனை

கே: இலங்கை மக்களின் புத்தி எப்படிப்பட்டது?

ப: ரபர் கொடுத்து ரயர் வாங்கும் புத்தி. இல்மனைட் கொடுத்து கண்ணாடி வாங்கும் புத்தி. பொல்லுக் கொடுத்து அடிவாங்கும் புத்தி...... போதுமா?

★

வீ. இரத்தினகுமார் நீலாவணை

கே: அழகான உடை உடுத்துச் சமுதாயத்தை ஏமாற்றுபவர்கள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்

ப: அழகான போக்கிரி எனக்கருதுகின்றேன்.

★

த. இந்திரகுமார் கல்முனை

கே: அரசாங்கத்திற்கு வெட்கக்கேடு எது?

ப: போரால் அழிந்து கொண்டிருக்கும் வடபகுதி மாணவர்கட்குத் தரப்படுத்தல் போடுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. கமலநாயகி குருக்கள்மடம்

கே: கடவுள் எப்போது சிரிக்கின்றான்?

ப:- நேரத்தை மதிக்காதவன் மணிக்கூடு கட்டும் போது இறைவன் சிரிக்கின்றான்.

★

பிரதீஸ்வரன் அருணகிரி வீதி, மட்டக்களப்பு.

கே: சுவைத்திரள் சிறுவர்க்கான நூல் அல்ல என எனது நண்பன் கூறுகின்றான் உண்மையா?

ப: உண்மைதான் தம்பி... சிறுவர்க்காக எழுதச் சொல்லி எத்தனையோ பேரைக் கேட்டோம். எல்லோரும் எம்மை ஏமாற்றிவிட்டார்கள். நாம் ஏது செய்ய? பொறுத்துப்பார்.

★

நா. வேதாரணம் கல்முனைக்குடி

கே: இன்று சோசலிஷம் பேசுவதற்கு இளைஞர்கள் முன்வராமைக்குக் காரணம் என்ன?

ப: அவர்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மட்டும் பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். பணக் காரப் பெண்டாட்டி கிடைத்ததும் சோசலிஷம் பேச அவர்களுக்குப் பைத்தியமா? உமது பெண்டாட்டி ஏழை போலை! ஹீ......ஹீ

★

அ. தங்கவேல் சிங்களவாடி

கே: நாளைக்கும் நிலவு வரும் நாம் இருக்க மாட்டோம்; நாளைக்கும் பூ மலரும் நாம் இருக்க மாட்டோம்...... இந்தப் பாணியில் உம்மால் ஒரு பாடல் பாட முடியுமா?

ப: நாளைக்கும் நிலவு வரும் நாம் இருந்து பார்ப் போம். நாளைக்கும் பூ மலரும்; நாம் இருந்து பார்ப்போம்.

★

கலையுள்ளம் மசூத் அஹமத் மத்திய வீதி,
காத்தான்குடி.

கே: மைடியர் கருடன்!

தற்கால நவநாகரீக உலகில் சினிமா நடிகர் களுள் தங்களுக்குப் பிடித்த நடிகர் யார்? நடிகை யார்? பழங்காலத்து நடிகை யார்? நடிகர் யார்? பதிலைக் கவிதையில் சொல்?

நவ உலகில் கமலஹாசன், நடிகையானால்'குஷ்பு'
பழங்காலம் என எடுத்துரைத்தால்
பட்டியலோ நீண்டு செல்லும்
பட் பட் எனப் பதில் சொன்னால் படவுலகம்
கெம்பி எழும்

கிட்டப்பா, வீரப்பா, பகவதர், சந்திரபாபு
இவர்களெல்லாம் என் ரசிகர் இது மட்டோ?
''சந்திரலேகா'' ராஜகுமாரி, அடுத்தாற்போல்
பத்மினியாம்......
சமகாலச் சாவித்திரியாம் என் ரசனை
அறிந்திடுவாய்!

எட்டிடியாம் என் கவிதை; நிறுத்துகின்றேன்.
கவிதை மழை

★

த. நவநீதன் வாழைச்சேனை

கே: பாலைவனத்தில் குடியேறிச் சந்தோசமாக வாழ முடியுமா?

ப: பாலைவனத்தில் சந்தோசமாக வாழ முடியும் என முதல் குடியேற்றம் அமைத்தவர் முதல் இஸ்ரவேல் பிரதமர் பென்குரியன். உங்க பொண்டாட்டி தியாகி என்றால் இமயமலை முடியிலும் சந்தோசம் மலரும். சகராப் பாலை வனத்திலும் சந்தோசப் பூ மலரத்தான் செய்யும். ரேக் இற் ஈசி.

★

கே. ரி. மோகனதாஸ் கொட்டாஞ்சேனை

கே: உலகில் கஷ்டமானது எது?

ப: பிரிந்த குடும்பத்தையும் ஒன்று சேர்க்கலாம் இரண்டு பத்திரிகையாளர்களை ஒன்று சேர்ப் பது கஷ்டமானது.

★

வ. நல்லதம்பி பெரிய கல்லாறு

கே: இந்த உலகின் நிலை எப்படிப்பட்டது?

ப: இந்த உலகிலே வானமும் பொய்க்கும்; வாய் மையும் பொய்க்கும். அதுவே உலகின் இன்றைய நிலை.

★

கோபி கல்லடி

கே: கருடா எமது ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் ஆங்கில நிகழ்ச்சிகள் சிங்களத்தில் மொழிபெயர்க் கப்பட்டு ஒளிபரப்பாகிறதே ஏன் தமிழிலும் மொழிபெயர்த்தால் என்ன?

ப: தமிழ் பேசுவோர் எல்லோரும் ஆங்கிலம் தெரிந் தவர்கள் என்று சொல்லாமல் செல்கிறார்கள். பிறகு எதற்குக் கோபி மொழிபெயர்ப்பு - சேட் கொலரை உயர்த்திவிடு.

---

ஒருநாய் ;- காலையில நான் துரத்தின மோட்டார் சயிக்கிள் என்ன ஓட்டம் ஓடிற்று.

மற்றநாய் :- நீ இத பெரிசா சொல்லுறா நாங்கள் அந்தக் காலம் துரத்தின நோட்டீஸ் கார் என்ன ஓட்டம் ஓடும்'

ஒருநாய் ;- ? ? ?

இ.சீதாராமன்
சித்தாண்டி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வாடகை
## ஜோக்ஸ்




முதலாளி:- உங்களுக்கு சென்ற கிழமை ஒரு ஆண் குழந்தை பிறந்தது எனக் கேள்விப் பட்டேன் உண்மையா?

வாடகைக்குடியிருப்பாளர்:- ஆமாம் முதலாளி

முதலாளி:- நீங்கள் இனி இருவர் அல்ல மூவர். ஆண் குழந்தைக்கும் சேர்த்து 500 ரூபா வாடகை கட்டவும்.

வாடகைக் குடியிருப்பாளர்:- ? ? ?

★

முதலாளி:- தம்பி .. உனது காதலி நேற்றுக் கனவில் வந்தாளா...!

வா. குடியிருப்பாளர்:- இது என்ன வெட்கம் கெட்ட பேச்சு ..

முதலாளி:- கனவில் வந்திருந்தால் கூடுதலாக வாடகை கேட்க யோசித்தேன்

வா. குடியிருப்பாளர்:- ? ? ?

★

ஒருவர்:- நீங்க சின்ன தொறைதானே...

மற்றவர்:- ஓமோம் எப்படிக் கண்டு பிடிச்சீங்க......

ஒருவர்:- இல்லை... நீங்க கூலிக்கு வீடு வாங்கி " றூம் " வாடகைக்குக் கொடுக்கிறீங்க... அதுதான் சின்னதொற என்கின்றேன்...

மற்றவர்:- ? ? ?

முதலாளி:- நீங்கள் யாழ்ப்பாண ஆள் எண்டால் எங்களுக்குக் கூட வாடகை தரவேணும்!

மற்றவர்:- ஏன் ?

முதலாளி:- அங்கை கிணத்திலை அள்ளிக் கஷ்டப் படுகிறீங்க...... இங்கை பைப்பிலை வருகுது தண்ணீர்......

★

முதலாளி:- நீங்கள் தண்ணீர்த் தொட்டி கட்டும் காசை இலவசமாகத் தாருங்கள் றூம் தருகின்றேன்.

மற்றவர்: ! ! ! ? ? ?

முதலாளி:- யாழ்ப்பாணத்திலை பங்கர் வெட்டுற காசை இங்கை சும்மா தரச் சொல்றன். அவ்வளவுதான்.

மற்றவர்;- ? ? ?

★

வா. குடியிருப்பாளர்:- என்ன முதலாளி இரவு 8 மணிக்கு வந்திருக்கிறீங்க...?

முதலாளி:- இரவு 5 மணிக்குச் சூறாவளியாம். வாடைக்காசு அவசரம் தேவையாக உள்ளது.

★

முதலாளி;- நீர் வீட்டை விட்டு உடனடியாக வெளியேறும்!

வாடகைக்காரர்:- ஏன்

முதலாளி;- வாடகை வீடு என்றும் பாராது மரநட்ட குற்றவாளி நீ...

குடியிருப்பாளர்;- ? ? ?

---

## சேட்டம் பத்திய செய்திகள்


**செய்தி வாசிப்பு: சேரமணி**

1. பசறையில் ஏழடி உயரமான தேயிலைச் செடியில் ஐந்து அடி உயரமான பெண்கள் கொழுந்து பறிக்க நிர்ப்பந்திக்கப் படுகின்றார்களாம்!
2. மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பஞ்சுக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுகின்றதாம்!
3. புத்தளம் பகுதியில் தொடர்ந்து பெய்த மழையால் 50 லட்சம் ரூபா உப்பு வெள்ளத்தில் கரைந்தது.
4. நாலு ஆயிரத்துக்கு மேல் இருந்த கலைமான்கள் இப்போது 400 ஆக இலங்கையில் குறைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடினோம் ஓடினோம்!!



- உண்மைக் கதை -

## கல்லடி " விபுலாநந்ததாசன் "

அன்று நான் கல்லடி - உப்போடை, விவேகானந்த வித்தியாலயத்தில் உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எமது கல்விச் சுற்றுலாவில் நடந்த ஓர் சம்பவத்தை உங்களுக்கும் 'சுவைத்திரள்' மூலம் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

எங்கள் புவியியல், சரித்திர ஆசிரியர் மிகவும் திறமைசாலி, கற்பித்தவற்றை நேரில் காட்டி விளக்குவதில் மிகவும் ஆர்வமுள்ளவர். பொலனறுவையைப் பற்றி விளக்கிய அந்தச் சரித்திர ஆசிரியர், கல்விச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். வகுப்பு மாணவர்கட்கெல்லாம் ஓரே குதூகலம். திட்டமிட்டபடி பொலனறுவைக் கல்விச் சுற்றுலா ஆரம்பமானது.

இப்போது போலப் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. பொலனறுவை புகையிரத நிலையமிருந்து கால் நடையாகத்தான் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குச் செல்ல வேண்டும். மூட்டை, முடிச்சுகளுடன் கும்மாளம் நிறைந்த கால்நடை ஆரம்பமானது பாடியும், கதை சொல்லியும் பிரயாணக் களைப்பில்லாது சென்று கொண்டிருந்தோம். மங்கிய நிலவு, வயல் வெளியூடே மிருகங்களின் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது; சில வேளை யானைகள் பாதையின் குறுக்கே வருவதுண்டு என்ற வதந்தி பற்றியும் ஓரளவு மனப்பயம் இருந்தது. சிறிது தூரம் சென்றதும் பாதையின் பக்கத்தில் யானைக் கூட்டம் நிற்பதுபோன்றகாட்சிதெரிந்தது,, மங்கிய நிலவில்நின்றது எருமை மாட்டுக் கூட்டம் என்று ஊகிக்க முடியவில்லை. ஏற்கனவே யானைகளைப் பற்றிய பயம் வேறு இருந்தது. சிறிது தயங்கி நின்று இயன்றவரை குனிந்தும், நிமிர்ந்தும் பார்த்தோம். யானைக் கூட்டம் எம்மை நோக்கி வருவதாகவே எமது ஏகமனதான முடிவு. பின்கேட்கவா வேண்டும். பயமதிகமுள்ளவர்கள் வந்த வழியே திரும்பி ஓட ஆரம்பித்தோம். சற்றுத் துணிந்த மாணவர்களும் சுற்றுலாவுக்குத் தலைமை தாங்கிய ஆசிரியரும் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு ஓட்டப் பந்தயத்தை ஆரம்பித்தனர். கையிலிருந்த மூட்டை முடிச்சுகளெல்லாம் பாதை ஓரத்தில் வீசப்பட்டன. உயிர் தப்பினால் போதும் என்ற ஓரே நோக்குடன் ஓட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அரைவாசித் தூரம் ஓடி இருப்போம். தெய்வாதீனமாக பொலனறுவை நகரிலிருந்து ஒரு 'லொறி' வந்தது. நாங்கள் ஓடுவதைக் கண்ட லொறிச் சாரதி வண்டியைநிறுத்தி 'ஏன்இப்படித்தலை தெறிக்க ஓடுகிறீர்கள்' என்று கேட்டார். நாங்கள் யானை வந்தகதையைச்சொன்னோம். அவர் விழுந்து, விழுந்து சிரித்தார். எங்களுக்கு ஒருபுறம் அவர்மீது ஆத்திரம் பிறகுதான் நாங்கள் கண்டது யானைக் கூட்டமல்ல குடுமிதிக்க வந்த எருமை மாட்டுக் கூட்டம் அவை என விளக்கினார். போன உயிர் திரும்பி வந்த மாதிரி ஒரே மகிழ்ச்சி கொண்டோம். பின் ஆசிரியரின் வேண்டுதலின் பேரில் எம்மை எல்லாம் லொறியிலேற்றி தங்குமிடம் சேர்ப்பித்து திரும்பிச் சென்றார் அந்தச் சாரதி. அத்துடன் முடிந்ததா தொல்லை இல்லவேயில்லை. ஓடிய களைப்புத் தீர நானும் ஒரு சிலரும் வயிருமுட்ட பச்சைத் தண்ணீரைக் குடித்து விட்டோம். இரவு உணவு முடிந்து உண்ட களைப்பும், ஆயாசமும் தீர நித்திரைக்குச் சென்று விட்டோம்.

சிறிது நேரத்தில் சிறுநீர்கழிக்க வேண்டுமென நானும் ஒருசிலரும் எழுந்து, வெளியே வந்தோம். சிறுநீர் வருவது போன்ற உணர்வு. ஆனால் சிறுநீர் கழிக்க முடியாது. வெகுவாகத் திண்டாடினோம். எங்கள் நிலையை அறிந்த ஆசிரியர் எங்களைப் பக்கத்திலுள்ள கடைக்கு அழைத்துச் சென்று எங்கள் பரிதாப நிலையைக் கடைக்காரருக்கு எடுத்துக் கூறினார். கடைக்காரர் எம் நிலையை அறிந்து சிறிதளவு சுண்ணாம்பைத் தந்துபொக்குளைச் சுற்றிப்பூசிவிட்டுப் படுத்தால் எல்லாம் சரியாகி விடும். என்றார். அங்குள்ள நீரில் உலோகத்தன்மை கலந்துள்ள விடயத்தையும் விளக்கினார். கல்விச் சுற்றுலா முடிந்து திரும்பும் வரை சுடுநீரையே பருக நாம் தயங்கவில்லை. மறுநாள் பாடசாலை வந்ததும், எமது பிரயாண நினைவை சக மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

---

ஒருவர் : அந்தத் தேநீர்க்கடை முதலாளி சரியான சுரண்டல் பேர்வழி

மற்றவர் : எப்படி ?

ஒருவர் : வடைக்குப் பெரிய ஓட்டை வைச்சிருக்கிறார்

- இளமயன் -

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை கூறிக் குசேலர்



இன்று கிடைக்கும் ரொட்டிக்காக நேற்று ரொட்டி தந்து உதவியவனை மறப்பவன் முட்டாள். இன்று அவனுக்கு ரொட்டி வாங்கிக் கொடுப்பவன் நாளைய முட்டாள்.

## புதுவருட வாழ்த்து

### தை மாதம் மலர......

கூர்மை புத்தியுடன்
நேர்மை வேண்டி
பொறாமை நீக்கி
பொறுமை வேண்டுவோம் !
மோசடி இன்றி
நேசம் வேண்டி
உன்னத வாழ்வில்
உயர்ச்சி வேண்டுவோம் !
வார்த்தையில் உறுதி
சேர்வதற்கு வேண்டி
வளமான வாழ்வுக்கு
வசந்தம் வேண்டுவோம் !
தீய எண்ணங்கள்
தீக்கிரையாக வேண்டி
தூய எண்ணங்களால்
துயர் நீங்க வேண்டுவோம் !
பண்பாடு வளர
பணிவுடன் வேண்டி
தைமாதம் மலர
தன்னம்பிக்கையுடன் வேண்டுவோம் !

- மடவளை கலீல்

ஒரு நிமிடக் கதை

# கனவா? நனவா?

காட்சி 1

ஓர்இலங்கையரும்ஒருவெளிநாட்டுக்காரரும்சந்தித்துக் கொண்டனர். இலங்கையரோ, தம் நாட்டைப் பற்றி மிகவும் பெருமையாகக் கூறிக் கொண்டார். ஆனால் வெளிநாட்டு நபரோ அவர் கூறிய எதையுமே நம்பத் தயாராக இல்லை. 'சிலோன் காரர் நிறையப் பேர் தம் இயற்கைக் கடன்களை காடுகளிலேயே கழிக் கிறார்கள்.' என்றார் வெளிநாட்டு நபர்:

இலங்கைக் காரருக்கோ பொல்லாத அவமானமாய் போய்விட்டது. ஏற்கவும் முடியாது. மறுக்கவும் முடி யாது திண்டாடினார். என்றாலும் தருணம் வரும் போது வெளிநாட்டு நபரை பழிவாங்கத் திட்ட மிட்டிருந்தார்.

காட்சி 2

வெளிநாட்டில் வெளிநாட்டு நபரும், இலங்கைக் காரரும் வாகனமொன்றில் பயணித்துக் கொண்டி ருந்தனர். இலங்கைக் காரருக்கோ வெளிநாட்டு நபரை பழிவாங்கும் எண்ணமே மேலோங்கியிருந்தது. யன்னலுக்கு வெளியே பார்வையை செலுத்திக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்த சிலோன் காரர் உசாரானார். ''வாகனத்தை நிறுத்தும் நண்பரே'' என்று கத்த, வெளிநாட்டு நபர் வாக னத்தை அவசரமாக நிறுத்திவிட்டு ' ஏன் ? ' என்றார்.

நீர் ரொம்பவும் தான் உமது நாட்டைப் பற்றி பெருமையடித்தீர். அதோபாரும் அந்தக் காட்டுக்குள் குந்தியிருப்பது யார் என்று ஏளனத்துடன் சிலோன் காரர் கூற, வெளிநாட்டார் ஆச்சரியத்துடன் பார்த் தார். உண்மைதான். 'இப்போது தவறை ஏற்றுக் கொள்கிறீரா? , இது சிலோனார். ' ம் ' ஆச்சரியமா யிருக்கே, என்றாலும் போய் பார்த்து விடுவோம். '' என்று வெளிநாட்டுக்காரர் கூற, இருவரும் அருகே சென்று பார்த்தனர்; என்ன ஆச்சரியம் அங்கு நின் றது ஓர் சிலோன்காரர். பிறகென்ன இலங்கை நபரின் முகத்தில் அசடுதானே வழிந்திருக்கும்.

- றிஜானா ஏ. மஜீத்
இக்கிரி கொல்லாவ

ஒருவர் : மட்டக்களப்பில் சைவம் வளர்ப்பதற்குக் கோயில் ஒன்று கட்டப் போகின்றேன்''

மற்றவர் : சைவக் கோயில் அதிகம் இருக்கு...... சைவக்கடை போட்டுப் பாரும்

ஒருவர் : ? ? ?

- வீரக்கோன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் கிருபானந்தவாரியார் நகைச்சுவைகள்

சிந்தனையுடன், சிரிப்பும் கலந்து பேசித் தமிழை யும், சைவத்தையும் வளர்த்தவர்களில் முக்கிய மானவர் தருமுருக கிருபானந்தவாரியார். அவரின் சிந்தனைமிக்க பேச்சுக்களிலிருந்து சில விசயங்களைச் சுவைத்திரள் வாசகர்கட்காகத் தருவதில் பெருமை அடைகின்றோம்.

(ஆ + ர்) சுவைத்திரள்

பட்டினத்தார் ஒருநாள் நெடுந்தூரம் நடந்தார். அவருக்குச் சரியான களைப்பு உண்டானது ஒரு. வரம்பில் படுத்துக் கொண்டார். கையைத் தலைக்குக் கீழ் அணையாக வைத்திருந்தார்.

''பாவம் இந்தச் சாமியார் வரம்பில் கையே தலையணையாக வைத்துக் கொண்டு படுத்திருக் கின்றார்'' இப்படி ஒரு பெண் தனது தோழியிடம் சொல்லிக் கொண்டாள்.

''இவர் உண்மையான துறவியாக இருந்தால் கையைத் தலையணையாக வைத்திருப்பாரா? தலையணையைப் போன்று கையை வைத்திருக்கும் இவரும் துறவியா? இப்படிக் கேட்டாள் மற்றவள். சம்பாசனையை முடித்துக் கொண்டு இருவரும் தண்ணீர் அள்ளச் சென்று விட்டனர்.

நாம் தவறு செய்து விட்டோம் என எண்ணிய பட்டினத்தார் கைகளை எடுத்துவிட்டு மல்லாக்காகப் படுத்துக் கொண்டார். அந்தப் பெண்கள் மீண்டும் திரும்பி வந்தனர். ''இப்போது பாத்தியாடி'' சாமியார் கைகளை எடுத்து விட்டு மல்லாக்காகப் படுத்திருக்கிறார்; இவரெல்லோ சாமி'' என்றாள் முன்னவள் ''வழியில் போன நாம் பேசின பேச்சைக் கேட்டுத்தானே இவர் கையை எடுத்துக் கொண்டார். இவர் என்ன சாமி''? என்றாள் மற்றவள். இதைக் கேட்டுப் பட்டினத்தார் திகைத்துப் போனார். வாரியார் அவர்கள் இவ்வாறு ஒரு கூட்டத்தில் கூறினார். அதாவது மற்றவர்களுக்காக நமது கொள் கைகளை விடலாகாது என்பதை விளக்கவே இக் கதையைக் கூறினார். கூட்டத்தில் கரகோசம் மிகுந்தது.

- நன்றி
ஆனந்தவிகடன்

இராமாயணம், மகாபாரதம், திருவிளையாடல் புராணம் ஆகிய கதைகளை வாரியார் சொல்லும் போது தனி அழகு உண்டாகும். வார்த்தைகளும், பாடல்களும் அடுக்கடுக்காக வரும் ஒரு முறை இராமபிரான் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஏகிக் கொண்டிருக்கிறார்'' என நாட்டை ராகத்தில் கூறினார். வயலின் வித்துவானோ எதுவித அக்கறையுமில்லாமல் வில்லினை வாசித்துக் கொண்டிருந்தார். இதைக் கவனித்த வாரியார் திரும்பவும் அந்த வசனத்தைக் கூறி ''நாட்டை'' என்ற வார்த்தையை இரண்டு தரம் உரத்து அழுத்தமாகக் கூறுகின்றார். அப்போதும் வயலின் வித்துவான் நிலையை உணராது போகவே வாரியார் ''இராமபிரான் நாட்டை விட்டேகு வதைக் கேட்ட வயலின் வித்துவானும் நாட்டை விட்டோடிக் கொண்டிருக்கின்றார்'' எனச் சிலேடை யாகக் கூறினார். பொதுமக்கள் விழுந்து சிரித்தனர்.

நன்றி: நவாலியூர் சச்சிதானந்தன்



குரு :- உலகத்தில் பெரிய நகைச்சுவை என்ன சீடா?

சீடன் :- குருவே உலகின் மிகப்பெரிய நகைச் சுவை என்ன என்றால் தேயிலைக்குப் பெயர் பெற்ற இலங்கைநாட்டில் சர்வதேச கட்டு நாயக்கா விமான நிலையத்தில் அமைந் துள்ளகன்டீனில் தேநீர் விற்கப்படாமைதான்

குரு ;- வெறிகுட் !யு ஹெற் டவுன்!

சில்லாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கள்ளுக் கதை**

''கணவன்'' படம் ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் படத்தில் ''அவள் உன் வழியில் வராவிட்டால் நீ அவள் வழியில் செல்'' என ஒரு வசனம் வருகின்றது. படம் ஓடிய கால கட்டத்தில் இந்த வசனம் மிகவும் பிரபல்யமாக இருந்தது.

ஒருநாள் வாரியார் கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். பக்கவாத்தியக்காரர்கள் சரியான படி இயங்கவில்லை. உடனே வாரியார் சொன்னார். பக்கவாத்தியங்கள் சரியாக என்னுடன் ஒத்துழையா விடில் நான் அவர்கள் வழியில் சென்று பிரசங்கத்தை முடிக்கின்றேன்'' பக்கவாத்தியகாரர்கள் திடு திடு என முழித்தனர்.

மதுவின் கொடுமை பற்றிப் பேசுவதில் வாரியார் முன்னணியில் திகழ்ந்தவர். சில கதைகளைக் கற்பனையாகச் சொல்லி மதுவின் கொடுமையை விளங்கப்படுத்துவதில் அவர் சமர்த்தர்.

ஒருவன் காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். அவன் முன்பு ஒரு பேய்தோன்றியது. அவனிடம் இரண்டில் ஒரு பிழையைச் செய்யுமாறு பேய் வேண்டியது. முதலாவது ஒரு பெண்ணைக் கெடுப்பது. இரண்டாவது ஒரு முட்டி கள் குடிப்பது. இதில் முதலாவது மிகப்பெரும் பாவம் என உணர்ந்த வழிப்போக்கன் ஒரு முட்டி கள்ளைக் குடித்து பேயின் ஆசையை நிறைவு செய்தான். கள்ளைக் குடித்த மனிதன் கடைசியில் பாவம் எனக் கருதிய முதலாவது விசயத்தையும் மதுபோதையில் செய்து விட்டான். எனவே மது தீமையானது இதுவே வாரியாரின் உபதேசம்.

**செழியன் சொல்கிறார்**

ஆத்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றிடினும் விஞ்ஞானம் வளர்ந்தால் தான் நாடு முன்னேறும் என்ற கருத்தை வாரியார் கொண்டிருந்தார். வாரியார் அவர்களைப் பேட்டி கண்டபோது இவ்வாறு தெரிவித்ததாகப் பத்திரிகையாளர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்.

நன்றி - தினகரன்

## நூற்றாண்டு ரகசியம்

போயர் யுத்தத்தில் போரிட்ட மிஸ்டர் ஒலிவர் ட்ரறோர்ன் என்பவருக்கு இப்போது வயது 100. இவ்வளவு காலம் அவர் வாழும் ரகசியம் என்ன என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில் இது தான்!

நான் எழுதப் படிக்கவே ஒரு போதும் கற்க வில்லை. எனவே மற்றவர் மாதிரி என் மூளையைச் செலவழிக்க எனக்கு ஒரு போதும் அவசியம் ஏற்படவில்லை. நான் எதற்கும் கவலைப்பட்டதேயில்லை என்றார்.

- இங்கிலீஸ் டைஜஸ்ட் -

## - கொழும்பு டயரி -

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

**கொழும்பு:** குட்டி யாழ்ப்பாணம்

**லொட்ஜ்:** வாடகையை நினைத்தால் நித்திரை வராத இடம்.

**ஓட்டோ:** நேர் வழியும், சரியான மீட்டரும் தெரியாத 3 சில்லு வாகனம்.

**காலிமுகக் கடற்கரை:** தமிழ் மக்களுக்குச் சூடான கடற்கரை; அல்சேசன் நாய்கள் சுதந்திரமாக மூச்சுவிடும்.

**மாளிகாவத்தை:** பிறப்புச் சேட்டிபிக்கற் ஒழித்து விளையாடுமிடம்-

**கொட்டாஞ்சேனை:** பழைய கள்ளுக் கொட்டில்களை ஞாபகப்படுத்தும் பிரதேசம்.

**பணக்காரர்:** சுதந்திரமாக மூச்சு விடுவதற்குக் காவற்காரர் தேவைப்படும் மனிதர்கள்.

**பிச்சைக்காரர்:** ஏன் பணம் வைத்திருக்க வேண்டும் என்பதைப் பணக்காரர்கட்கு ஞாபகப் படுத்த இடையிடையே வரும்நாடோடிகள்.

**குதிரைப் பந்தயநிலையம்:** கோளை நம்பாதோர் ஊழை நம்பும் இடம்.

**உறங்கல் இருக்கை! (பேர்த்)** இனவாதத்துக்குப் பயந்தோர் ஞான ஒடுக்கத்தில் இருக்கும் தங்க(ல்) அறை.

**ஆங்கில நாளேடுகள்:** தமிழ் மக்கள் வாங்கிப் படிப்பர், ஆனால் தமிழ் மக்கள் பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்காது.

**செய்திப் பத்திரிகை (தமிழ்):** தமிழ் மக்களுக்காகப் பரிந்து எழுதி தமிழ் பத்திரிகையாளர்கட்கு உரிய சம்பளம் கொடுக்காத புதினத்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராவஸ்தி:**

வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைக்காக விகிதாசாரப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தங்கி நிற்கும்கொட்டில்; ரெலிபோன் வசதியும் உண்டு.

**வெலிக்கடை:**

வாடகைக்கும், சாப்பாட்டிற்கும் காசு கட்டத் தேவையில்லை!

**உறவினர்:**

வாடகைக் காசில் மாத்திரம் செல்லு படியாகாத இரத்த உறவுகள்.

**ஏஜன்சி:**

உள்ளூர் மேய்ச்சல் தரை.

**மோட்டார் சைக்கிள்:** அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே என்ற பாடலை ஞாபகப்படுத்தும் ஒருஇழுவை வண்டி.

**பஸ்:** பொக்கட்டில் காசில்லாத நேரத்தில் பார்த்திருக்கும் சிவப்பு வண்டி.

**மிஸ் (Miss):** கல்யாணம் செய்ய 'மிஸ்' பண்ணு மட்டும் 'விஸ்' பண்ணப்படும் அழகான ஆங்கிலச் சொல்.

**சினிமாத்தியேட்டர்:** பக்கத்தில் இருப்போரைத் தெரியாதவர்கள் திரையில் தெரிந்தவர்களைப் பார்க்கவரும் இடம்.

---

**ஆசிரியர்:** இடியப்பம் என்பதை வைச்சு இரண்டு வசனம் சொல்லு?

**மாணவன்:** மட்டக்களப்பில் இடியப்பம் சாப்பிட்டால் சொதிக்கும் பிறிம்பாகக் காசு கேட்பார்கள். கொழும்பில் உள்ள அம்பாள் கபேயில் இலவசமாகத் தருவார்கள்.

**ஆசிரியர்:** ? ? ? ?

- இந்திரசித்து -

கவிமழை

# 'பக்கிள்' பறக்க சிரட்டை தட்டுகிறாள்!

- கவிஞர் செ. குணரத்தினம் -

பக்கத்துப் பாழ்வளவு மாமரத்தில்
பக்கிளொன்று இருந்துமுக்கித் தொலைப்பதனால்
சிக்கெடுக்க முடியாத தவிப்பினோடு
சின்னம்மா சிரட்டைகளைத் தட்டுகிறாள்.

எலும்பாகப் படுக்கையிலே கணவன் வீழ்ந்து
எத்தனையோ மாதங்கள் கடந்து போச்சு
வலுவில்லை அவனுக்கு எழுந்திருக்க!
வைத்தியரும் கைவிட்டால் என்ன செய்வாள்

"சூனியமாம்" என்றூரார் சொல்கின்றார்கள்
"சுத்தப்பொய்" என்றிடவும் முடியவில்லை
மாரியம்மன், காளியென்று நேர்த்திவைத்து
மன்றாடி இதுவரையில் பலனேயில்லை

தண்ணி வெந்நீர் வாய்க்குள்ளே ஊற்றினாலும்
தவில்போல வாயடைத்து வழிந்துபோகும்
உண்ணாமல் உறங்காமல் அவன் கிடக்க
உசிர்மட்டும் மெல்லவெளி வந்துபோகும்!

"பூரணைக்குள் இவன் கூப்பன் கிழியுமென்று
பக்கத்தில் உள்ளவர்கள் பயமுறுத்த
நேராத தெய்வமில்லை சின்னம்மா; தன்
நெஞ்சுக்குள் அழுவதையார் பார்க்கின்றார்கள்?

"பக்கிள்வந்து ராத்திரியில் முக்கிச் சென்றால்
பாதகம்தான்; கிட்டடியில் மரண"மென்று
பக்கத்தில் வாழ்பவர்கள் சின்னம்மாவின்
படுத்திருந்த கணவனையே நினைத்துக்கொண்டார்

எட்டுமணி இரவுசென்றும் பக்கிள் சத்தம்
இவள் சிரட்டை அடிகேட்டும் ஓடவில்லை.
"கத்தியது தொலைக்கட்டும் எல்லாமந்த
கடவுள் செயல்" என நினைத்துப் படுத்துக் கொண்டாள்

கணவனுக்குப் பக்கத்தில் படுத்தவாறே
கைகளினால் அவன் நெஞ்சைத் தடவும்போது
பிணம்போல கிடந்த அவன் அரண்டு மெல்ல
"பாலிருந்தால் அடிச்சித்தா பிள்ள" என்றான்

திடுக்குற்ற சின்னம்மா துடித்தெழுந்தாள்
"தெய்வமே" என்றோடிப் பால் கொணர்ந்து
'கொடுங்கைக்குள் அணைத்தவனைக் கொடுத்தாள் பாலை
குடித்துவிட்டு அவனெழும்ப முயற்சி செய்தான்

ஆச்சரியம் அவளுக்கு இல்லை தெய்வ
அனுக்கிரகம் கிடைத்ததென மகிழ்ச்சிகொண்டு
தீச்சட்டி போல்சூடு கணகணத்த
தெய்வமான அவனுடலைப் பிடித்தாள் கட்டி.

அவ்வளவுதானிருக்கும் அடுத்த வீட்டில்
அழகம்மா அழும் சத்தம் கேட்கிறது
"எவவளவோ பேரிருக்க இந்தப் பக்கிள்
என்புருசன் உயிர்குடிக்க வந்ததேனோ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல

**அகளங்கன்**

தென்றலாய்ப் புயலாய்த், திகட்டாத தேன் சுவையாய்ச், செந்தமிழைத் திரைப்படப் பாடல்கள் மூலம் திசையெல்லாம் ஒலிக்கச் செய்தவர் கவியரசர் கண்ணதாசன்.

தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் வரிசையிலே மருதகாசி, பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம், கவியரசர் கண்ணதாசன் ஆகியோரின் பெயர்கள் என்றும் அழியாதிருக்கும் பெருமை பெற்றவை.

கவியரசர் கண்ணதாசன் பழந்தமிழ் இலக்கியத்திலே அதிக பயிற்சியும் ஈடுபாடுங் கொண்டிருந்தவர். அதனால், தனது மனதைத் தொட்ட பழந் தமிழ்ப் பாடல் வரிகளை, கருத்துக்களை கற்பனைகளைத் தனது திரைப்படப் பாடல்களிலே புகுத்தி பெரும் வெற்றி கண்டார்.

பாடல் வரிகளை ஒரு மாற்றமுமில்லாமல் அப்படியேயும் பயன்படுத்தியிருக்கிறார். சிறு சிறு மாற்றங்களோடும் பயன்படுத்தியிருக்கிறார்.

பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து கவியரசர் கண்ணதாசன் அவர்கள் தொட்டு, தன் பாடல்களிலே இட்ட எதுவும், இலக்கிய நெஞ்சங்களை எட்டாமல் போனதில்லை.

ஐம்பெருங்காப்பியங்களில் பெருஞ் சிறப்புப் பெற்ற காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளின் கைவண்ணம், கவியரசர் கண்ணதாசனின் கைவண்ணத்தில் மெருகேறி எப்படி மிளிர்கின்றது. என்பதை இங்கே காண்போம்.

கோவலன் சிலம்பு விற்கப் போய்க் கள்வன் என்ற பழியோடு கொலை செய்யப்படுகிறான். அவன் தங்கியிருந்த ஆயர் பாடியில் துர் நிமித்தங்கள் தோன்றுகின்றன.

அதனால் அச்சங்கொண்ட ஆயர்குலப் பெண்கள், தங்கள் குலதெய்வமான கண்ணனை நினைத்து குரவைக் கூத்தாடுகின்றனர். ''ஆய்ச்சியர் குரவை'' என்பது சிலப்பதிகாரத்தின் இப்பகுதிக்குப் பெயர்.

கண்ணனையும் கண்ணனின் மூல வடிவான மகா விஷ்ணு மூர்த்தி எடுத்த தூல வடிவ அவதார மகிமைகளையும் புகழ்ந்து அவர்கள் பாடிக் குரவைக் கூத்தாடுகின்றனர்.

மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோ அரணும் போர்மடியத் தொல்லிலங்கைக் கட்
டழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே

வாமன அவதாரமெடுத்த திருமால் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டுப் பெற்றுப் பின் விஸ்வரூபமெடுத்து நெடுமாலாகி ஈரடியால் மூவுலகும் அளந்தவர். அப்படி அளந்த சிவந்த பாதங்கள் மேலும் சிவப்படையத், தனது இராமாவதாரத்தில் தம்பி இலக்குவனுடன் காட்டுக்குச் சென்று இலங்கையின் கட்டுக் காவலை அழித்து இராவணனையும் கொன்றார்.

அத்தகைய திருமாலின் பெருமைகளைக் கேட்காத செவி என்ன செவி. அது செவியே அல்ல என்பது இதன் சுருங்கிய பொருள்

பெரியவனை. மாயவனைப், பேர் உலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக்; கண்ணும்
திருவடியும் கையும், திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே

பெரியவன், மாயவன், பெரிய உலகம் முழுவதையும் தன்விரிந்த தாமரைமலர்போன்ற வயிற்றிலே கொண்டவன், கண்ணும், திருப்பாதங்களும் கையும், வாயும் சிவந்த நிறங் கொண்டவன். கருமை நிறங்கொண்ட அந்த மகாவிஷ்ணுவைக் காணாத கண்ணென்ன கண், கண்ணிமைத்துக் காண்பவரது கண் என்ன கண். அது கண்ணே அல்ல.

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால்நாற்றிசையும்போற்றப்
படர்ந்தாரணம்முழங்கப் பட்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே.

அறியாமை மிகுந்த மனத்துக் கம்சனின் வஞ்சங்களை வென்றவன். துரியோதனன் முதலான நூறு கௌரவ புத்திரங்களிடம் வேதங்கள் முழங்கப் பாண்டவர்க்காகத் தூது நடந்தவன், அந்தக் கிருஷ்ணாவதாரம் எடுத்த நாராயணனைப் போற்றாத நா என்ன நா. அது நாவே அல்ல.

---

கொழும்பான்: மீன்பாடும் தேன் நாடான உங்கள் நாட்டில் என்ன விசேடம்?

மட்டக்களப்பான்: விசேடம் ஒன்றும் இல்லை. மீன் பாடுவதற்கு பதிலாக இங்கே இரவில் நுளம்பு பாடுகிறது.

த. துஷ்யந்தன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே'
'' கரியவனைக் கர்ணாத கண் என்ன கண்ணே ''
'' நாராயணா என்னா நா என்ன நாவே '' என்ற வரிகளிலே தன் மனதைப் பறிகொடுத்த இலங்கைப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் இலங்கை வளம் பற்றிப் பாடும் போது, கதிர்காமக் காட்சியை இதே ஞாபகத்தோடு அற்புதமாக வர்ணிக்கிறார்.

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயவென அருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவ்ழி யருவி
முத்துதிர மெய்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர ஒளிகாணாக் கண்ணென்ன கண்ணே.

மாணிக்க கங்கையிலே நீராடி, நீறாடி, அன்பிலே நெஞ்சம் உருக, விழிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிய, உடல் புளகாங்கித மடைய, வார்த்தை தடுமாற புதிதாக இயற்றிய செந்தமிழ்ப் பாடல்களைப் புகழ் மாலையாகச் சூட்டி, ஒப்பில்லாத கந்தப் பெருமானே சுகத்தைத் தா என்று பாடிக் கதிர்காமத்தைக் காணாத கண் என்ன கண் அது கண்ணே அல்ல. அங்கு எரியும் கற்பூர ஒளி காணாக் கண் என்ன கண். அது கண்ணே அல்ல. என்பது இதன் திரண்ட பொருள்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இப்பாடலைக் கவியரசர் கண்ணதாசன் படித்தாரோ தெரியாது. ஆனால் நிச்சயமாகச் சிலப்பதிகாரப் பாடல்களைப் படித்திருப்பார். அதன் தாக்கம் அருமையான காதல்ப் பாடலாக வெளிவந்தது. இதயக் கமலம் என்ற படத்தில் அப்பாடல் நல்ல இனிமையான இசையோடு ஒலித்தது.

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல.

செவியும், கண்ணும், நாவும் சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கண்ணை மட்டும் சொன்னார். கவியரசர் கண்ணதாசன் கண்ணோடு நெஞ்சையும், சொல்லையும், தன்னையும்இணைத்துக்இக்காதல்க் கவிதையத்தந்தார்

விழியில் விழுந்து இதயங் கலந்து உயிரில் ஒன்றிய காதலைக் காதலன் காதலி ஆகிய இருவருக்கும் பொதுவானதாக வைத்து '' நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல. நீ இல்லாமல் நானும் நானல்ல '' எனப் பாடிய கவியரசர் கண்ணதாசனின் இக்காதல் பாடலைக் கருத்தூன்றி, உணர்வு பூர்வமாக இரசித்தால் கவியரசரின் கவித்துவம் மகத்துவம் வாய்ந்ததாகத் தெரியும்.

- அகளங்கன் -

## உமா வரதராஜன் சொல்கிறார்

சிட்டுக் குருவிக்கு வழி சொல்லிக் கொடுக்கும் அபத்தத்தையே நான் மறுக்கின்றேன், ஸ்தாபன அல்லது சித்தாந்த ரீதியான பிரகடனங்களையும், கட்டுப்பாடுகளையும் ஒரு கலைஞன் சுமக்க ஆரம்பிக்கும் போது அவனிடம் இருந்து உயிர்த்துடிப்புள்ள படைப்பாற்றல் விடைபெற்று விடுகின்றது,

- முனைப்பு சஞ்சிகைப் பேட்டியில் இருந்து -

---


அழகுக்கு
அழகு தரும் ஆடைகட்கு
விஜயம் செய்யுங்கள்
↓
ரெடிமேற் சென்ரர்
இல: 02 திருமலை வீதி,
மட்டக்களப்பு.


அவன் :- இந்தமுறை A/L ரெஸ்ற் எடுத்தியே எப்படி ஈசியா?
இவன் :- சுவரா (Sure)ஒரு பாடம் 'E, வரும்.
அவன் :- மற்றப்பாடமெல்லாம் பாஸ்ஆகுவா தானே?
இவன் ;- இல்ல மற்றதெல்லாம் 'F, வும் வராதென்று சொல்வதேன்

(கேட்டுச் சுவைத்த )

## மணிக்கூட்டுச் செய்தி.

கொழும்பு கிராண்ட்பாஸ் பலாயரச் சந்தியில் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு கடந்த இரண்டு மாத காலத்துக்கு மேலாக இருபத்துநாலு மணிநேரமும் 12மணியையே காட்டுகிறது.

செய்தி.வீரகேசரி 17 ஜனவரி

இந்தமணிச்கூடும் ஒரு நாளைக்கு இரண்டு தரம் சரியாக மணிகாட்டும் என்கின்றான் சுவைத்திரள் அலுவலகப்பையன்.

## அடுக்குமொழி



### அண்ணாச்சாமி

காடு, வீடு, மேடு, கோடு எல்லாம் வெள்ள மயம். பள்ளத்தில் இருந்த மக்கள் எல்லாம் வெள்ளத்தில் அகப்பட்டு வீடிழந்தார். வீடு இடிந்ததால் பலர் மனம் உடைந்தார்! சிலர் உயிரிழந்தார். வீட்டுத் தலைவனை இழந்த தால் பல பெண்கள் பொட்டிழந்தார், பொலி விழந்தார், செயலிழந்தார், என்ன கொடுமை

விடிவதற்கு முன்பு பொம்பர் வருது
இருட்டி விட்டால் இடி விழுது
மின்னல் அடிக்குது ; பின்னல்
போல் தொல்லை வருது.

வெள்ளத்துக்குக் கொடுக்க அரசுசல்லி கொடுக்குது அதைச் செய்ய அதிகாரிகள் தயார் இல்லை. கள்ளக்கடத்தல் போல் வெள்ளப்பெருக்கில் இலாபம் அடைய அதிகாரிகள் நினைக்கப்படாது. பாயிரம் பாடாமல் முதலில் கொடு ஆயிரம்! சாட்டுக்கு ஒருக்கால் வீட்டுக்கு வந்து பனை விழுந் ததா திணை விளைந்ததா எனப் !! போட்டுக் கொண்டு கதை அளக்கப்படாது. வீட்டுக்கு வீடு வாசல் படி. இதை உணர வேண்டும்.

வெள்ளத்திற்குக் கொடுக்க வந்தகாசை ஒரு அதிகாரி கொடுக்கவில்லை. மந்திரி நடவடிக்கை எடுக்க உள்ளாராம். பேப்பரில் வந்தது செய்தி இவர்களுக்குக் கொடுக்க வேண்டியது பிடிசாபம் அல்ல! இடி சாபம் தம்பி.

நான் இருப்பது பாலையடி வெட்டை அகதியாக வாழ்வதனால் வீட்டிலே இடுகின் றேன் நான் முட்டை! இதனால் நான் சொல்வதை யாருமே செய்வதில்லைச் சட்டை!

மட்டக்களப்பிலே வளர்க்கின்றார் பலர் மாடு. அவைகள் எல்லாம் இரவினிலே வரு வதில்லை வீடு. அவைகள் இரவினிலே குந்தி இருக்கும் இடமோ.றோடு அவைக்கு எவருமோ இடுவதில்லைச் சூடு. மாடுகள் தொல்லையை நீக்குவதில்லைச்சட்டம்! கால் நடையாகப்போ வோருக்கு இந்தக் கால் நடைகள் பெரும் தொல்லை. வாகனத்தில் வருவோர்க்கு இவை கள் வழி விடுவதே இல்லை. நகரத்தை ஆட்சி செய்வது மாநகராட்சி ! ஆனால் இரவில் நடப்பது மாடாட்சி! எலக்ஷன் வருது! செ லக்ஷன் வருது!! ஆனால் மாடாட்சிக்கு விடிவு எப்போது ?

கட்டாக்காலி மாடுதான் தொல்லையா? பட்டி கட்டாத நாய்கள், பல்லை இறுமித் திரியுது ரவுணிலே. நாய்க்கழிவுகள் ரோட்டிலே. மீன்பாடுவது வாவியிலே. றோட்டிலே கத்துது கட்டாத பசு. வீட்டிலே குலைக்குது வளர்க் காத நாய்! ஏட்டிலே எழுதுகின்றார் பிரதேச வாதம். ஊரிலே நடப்பதை நான் உரையாது விட்டால் எனக்குப் பிடிக்குமே ''பிசு''

எமது தேசியக் கொடியில் Lion அதனால் நாம் கொழுத்தும் நுளம்புச் சுருளின் பெய ரும் லயன். தோட்டத்தில் தொழிலாளர் வாழ்வது பிறிதொருலயன். லயன் நாட்டில் நாம் இருந்து என்ன பயன்... வருகுது நுளம்பு ...போர்த்துக் கொண்டு படுக்கைக்குக் கிளம்பு: குட் பை.


வீட்டுப் பாவனைப் பொருட்கள்,
வீடு தேடி வர வேண்டுமா?
நாடிச் செல்லுங்கள்.
↓
மிருணாஸ் ஹோம் டெலிவரி
27, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.


ஒருவர் - ''என்ன சனிக்கிழமை வந்திருக்கிறியள்''
மற்றவர் - ''பதுவருஷம் சனியிலை வந்திருக்கு. அது தான் பார்க்க வந்தன் ''

- கில்லாடி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எழுச்சி தந்தது எம் பொங்கல்

எஸ் பொ.

சடங்கு சம்பிரதாயங்களிலே, அரசியல் சாயங்கள் பூசப்படுவதற்கு முந்தியே யாழ்ப்பாணப் பொங்கல் விழா, கமக்காரர் விழாவாக, பாட்டாளிகளின் விழாவாக, தமிழர் பண்பாட்டு விழாவாக, விளைவுக்கு உதவும் கதிரோனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக பழையன நீக்கி புதியன புனைந்து புதியன கொண்டுவந்து சேர்க்கும் என்கின்ற நம்பிக்கைகளின் நுழைவாயில் விழாவாகப் பொங்கல் பண்டிகையை யாழ்ப்பாண மக்கள் கொண்டாடினார்கள். அந்தப் பண்டிகை பற்றிய நினைவுகளிலே தோய்தல் எத்தகயை சுகமான அனுபவம் !

குஷினிக்குப் பின்னால் பதினெட்டு அடியான் தென்னைக்குப் பக்கத்தில், அம்மா புது அடுப்புக்கள் பிடிக்கத் துவங்கினவுடனேயே எனக்கு விளங்கிப் போகும் பொங்கல் கிட்டடியிலே வரப் போகுது எண்டது, சின்ன மாமாவின்ரை புண்ணியத்திலே தேவையான செம்பாட்டுக்களி மண்ணும் வந்து சேர்ந்திடும். அம்மா எப்பவும் எதிலும் தூசு துப்பரவு. ஒரு ஒழுங்கு. ஒரு நறுவீசு. சாயங்கால வேளையில் அவவைப் பார்த்தாத் தன்னாலை பக்தி வரும்.

அந்த நாளில் அரிக்கன்லாம்பு பிரபல்யம் அதைப் போல கை விளக்கும் மண்ணெண்ணெயிலை எரியும். ஒரு போத்தல் நாலு சதம். குத்து விளக்கு தேங்காண்ணெயிலை தான் எரியும். குத்துவிளக்கை ஏற்றின பிறகுதான் மற்ற விளக்குகளைப் பத்த வைப்பினம். குத்து விளக்குக்கு குறள் திரி எண்டால் புதுத்திரி போடுவா. திரிபோடுறதுக்கென்றே பழைய, கிழிஞ்ச வெள்ளை வேட்டியளைப் பத்திரப் படுத்தி வைச்சிருப்பா. வெள்ளிக்கிழமையலிலை சாம்பிராணிப்புகை காட்டுவா, எல்லா இடமும் கமகம என்று வாசினையாய் இருக்கும். விளக்கு வைப்பதற்கு முனனர் வளவு கூட்டப்படும். அம்மா முற்றத்தைக் கூட்டினால் நல்ல வடிவாய் இருக்கும். வகிடு எடுத்துத் தலை வாரியது போல, விளக்குமாறின் ஈக்கில்களின் நர்த்தனச் சுவடுகள் ஆழமாகப் பதிந்திருக்கும்.

மண்ணின் மணம் புழுதியுடன் கிளம்பும். நிலத்தைக் குளிர்ச்சியாக்க தண்ணீர் தெளிப்பா. சிலசமயம் மஞ்சள் தண்ணீர் · மஞ்சள் ஒரு கிருமி நாசினி எண்ட நம்பிக்கை இருந்தது.

பொங்கலுக்கான முதல் ஆயத்தம் புது அடுப்புப் பிடிப்பது. அடுப்புக்கு மூன்று கற்கள் பிடிக்கப்படும். ஒரு கல்லின் உயரம் ஒரு அடி இருக்கும் கல் என்றாலும் அது கட்டியான களிமண்ணிலே செய்யப்படும் அடுப்பு செய்வது பாரிய வேலை. அம்மா களைச்சுப் போவா. ஆனாலும் அவவுக்கு யாரும் உதவி செய்யப் போகக் கூடாது. உதவியை உபத்திரவமாக விளங்கிக் கொள்ளுவா.

அடுப்புக்கான கற்களைப் 'பிடித்து' க் காய வைத்தவுடன் மற்றைய வேலைகளும் துவங்கிவிடும். வீடு அல்லோல கல்லோலப்படும். அறைகள், குஷினி ஆகிய வற்றுள் அடைஞ்சுகிடக்கும் அத்தனை சாமான்களும் வெளியில் வந்து விடும். கழுவல் வேலைகள் துவங்கின.

## குஞ்சுக் குஞ்சுக் குணா குணா

ஒரு வைதிகர் - ஒரு வைசிகர் இருவரும் நல்ல நண்பர்கள். வைசிகர், ஒரு நாள் வைதிகரை விருந்துக்கு அழைத்தார். மரக்கறி உணவுகள்வகைவகையாகப் பரிமாறப்பட்டன. விருந்து முடிவிலே வைதிகர் கேட்டார்.

நண்பரே இம் மரக்கறிகள் ஏன் இவ்வளவு சுவையாக இருக்கின்றன? எனக் கேட்டார்

அதற்கு வைசிகர்

''இவற்றிலே குஞ்சு மீன் கருவாடுகள் போட்டு என் மனிசி சமைத்துள்ளாள். அவையே இச் சுவையை கொடுக்கின்றன'' என்றாராம். உடனே வைதிகர் வாயூற.....

''குஞ்சுக் குஞ்சுக் குணா குணா மாதா பிதா மகா குணா'' என்றாராம். அதாவது குஞ்சுகளாகிய சிறிய மீன்களே இவ்வளவு சுவை என்றால் தாய் தந்தை ஆன பெரிய மீனினம் எவ்வளவு சுவையாக இருப்பார் என விளக்கம் கூறினார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட வைசிகர் விழுந்து விழுந்து சிரித்தார்-

ஹ. தனஞ்செயன்
18, நல்லையா வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனை பல சாமான்கள் அடுப்புக்கு மண் எடுத்த கிடங்குக்குள் போகும். பேந்துதான் புதியன புழக்கத்திற்கு வரும். பொங்கலின்போது எல்லாச் சாமான்களும் புதியன போன்று தோன்றும். இந்தப் புதுக்கலுக்கு அம்மா நீண்ட காலமாகத் திட்டமிட்டு உழைப்பது வழக்கம்.

ஆரும் நச்சரிக்கத் துவங்கிறதுக்கு முந்தியே அப்புக்குட்டி மேசனைக் கொண்டு வந்து சேர்த்துப் போடுவார் சின்ன மாமா. உட்சுவர் வெளிச்சுவர் எல்லாம் சிப்பிச் சுண்ணாம்பில், பளிச்சென்று வெள்ளைநிறம்தெரியத்தக்கதாகநீலம்கலந்துவெள்ளையடிப்பார். அவர் வெள்ளையடிக்கிறதைப் புதினம் பார்த்துக் கொண்டு நிற்பன். பசிக்கவும் மாட்டுது. இந்த வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் எல்லாம் வீட்டுக்கு ஒரு புதுப் பொலிவு கொடுக்கும். இந்த மேசன் வேலைகள் எல்லாம் பொங்கலுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் முடிச்சால் தான் அம்மாவுக்கு நிம்மதி. திருப்பி அடுக்கிற வேலை எல்லாம் பம்பலாய்க் கிடக்கும். தூண்களுக்கு அடிச்ச மிச்ச 'பெயின்'ரைக் கொஞ்சம் தண்ணியாக்கி சங்கடப் படலைக்கும் அடிச்ச பிறகுதான் மேசனின் கணக்கு வழக்குகள் தீர்க்கப்படும்.

பொங்கலுக்கான சாமான்களை எல்லாம் பொங்கலுக்கு முதல் நாள்தான் அப்பையா வாங்குவார். ஐயம்பிள்ளை மாமாவும் சில சமயங்களில் கணபதி மாமாவும் சேர்ந்து கொள்வார்கள். பெரிய கடையிலை தான் வாங்குவினம். பொங்கல் பானை வாங்கிறதுக்கு அம்மாவும் போவா பானை மட்டுமல்ல குண்டாளம், சட்டிகள் கறிமூடிகள் என்றெல்லாம் வாங்கிப் போடுவா. பொங்கலுக்குப் பிறகு சமையற் பாத்திரங்களிலே ஏற்படுத்தப்பட விருக்கும் மாற்றங்களைப் பொறுத்து, இந்தக் கொள்வனவு நடக்கும். புதுச் சட்டிகள் வந்தவுடன் மரக்கறிச் சட்டிகள் பல 'பிரால்' சட்டிகளாக மாறும். பிரால் சட்டிகள் சில கிடங்கிற்குப் போகும், மரக்கறிச் சட்டி 'பிரால்' சட்டியாக மாறலாம், ஒருக்காலும் பிரால் சட்டி மரக்கறிச் சட்டியாக மாறாது. அதுதான் நியதி.

பொங்கலுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தாலும் பெரிய மாமாவும், சின்னமாமாவும் பட்டாசுக் கட்டுக்களுடன் வந்து இறங்கின பிறகு தான் எங்களுக்குப் பொங்கல் வந்து விட்ட தான குதூகலம் பிறக்கும். பொங்கலுக்கு இரண்டு மூன்று நாள்களுக்கு முன்பிருந்தே சைவப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சீன வெடிகள் வெடிக்கத் துவங்கி விடும். பெரிய மத்தாப்பு ஒன்றைக் கொளுத்தி பட்டாசு விழாவைச் சின்ன மாமாதான் துவக்கி வைப்பார் பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு என்று பலநிறஒளிப்பந்துகள்மத்தாப்புக் கொட்டுக்குள்ளிருந்து கிளம்பிப் போவது வடிவாய் இருக்கும். ஈக்கில் வானம் புரைக்கென்று சீறிக்கொண்டு தென்னோலைகளைச் சிராய்ச்சுக் கொண்டு ஆகாய உச்சிக்குப்

## குறுக்கெழுத்துப் போட்டி -1- முடிவுகள்

எமது சென்ற இதழ் குறுக்கெழுத்துப் போட்டியில் ஐவர் சரியான விடையினை மிருணாஸ் ஸ்தாபனத்தினர்க்கு அறிவித்து இருந்தனர். இதனால் எமது பரிசுத்தொகையான ரூபா 200 ஐ ஐவருக்கு முறையே 40/- ரூபாவாகப் பகிர்ந்து அனுப்புகின்றோம்.

போட்டியில் பரிசு பெறுவோர் :-

1) ராஜி தர்மலிங்கம்
5/1, தாமரைக்கேணி
குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.

2) எம். புத்திரசிகாமணி
காகித ஆலை,
வாழைச்சேனை.

3) செல்வி த. குழந்தைவேலு
சேகரிப்புப் பகுதி
நஷனல் பேப்பர் கம்பனி,
வாழைச்சேனை.

4) எஸ். கோகிலா
ஆலைக்குடிமனை
காகித ஆலை
வாழைச்சேனை.

5) S. நல்லதம்பி
தரக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்
காகித ஆலை
வாழைச்சேனை

இவர்கட்கு மிருணாஸ் ஹோம் டெலிவரி சேவையினர் பரிசு அனுப்பிவைப்பர்.

சரியான விடைகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1. சமாதானம் | 1. சஞ்சலம் |
| 7. கீதாஞ்சலி | 2. மாதா |
| 16. குலம் | 3. தாலி |
| 19. சலசம் | 4. சகுணம் |
| 29. மான் | 5. கீலம் |
| 32. புகை | 18. இன்பம் |
| 35. இலை | 21. கங்கை |
| | 29. மாலை |

போட்டியில் பரிசு பெறாத வாசகர்களே...... இருக்கவே இருக்கிறது அடுத்த போட்டி கலந்து கொள்ளுங்கள். பின்வரும் முத்திரையை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

சுவைத்திரள் குறுக்கெழுத்துப் போட்டி
C/O மிருணாஸ் ஹோம் டெலிவரி
27, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து போய் வெடிக்கும். பறக்கேக்கிள்ளை வெள் ளித் தூள்களைத் தூவும். ஈக்கில் வாணத்தாலை இரண்டு மூன்று வீட்டுக் கூரைகள் தீப்பற்றிக் கொண் டது எனக்குத் தெரியும். ஒருமுறை 'ஒட்டத்த' மயில் வாகனம் விட்ட ஈக்கில் வானத்திலை தான் முத்து மனுஷியின் குடில் எரிஞ்சுது. ஈக்கில் வாணம் விடுற துக்கு எனக்கு நல்ல விருப்பம்: ஆனால் சரியான பயம்.

சீனன் செய்ற வெடிதானே சீனவெடி ? சீனவெடிக் கட்டை உடைச்சு, பட்டுக்களை உதிர்த்தி விட்டால், பழக் கொச்சிக்காய்க் குவியல் போல சீன வெடிகள் கிடக்கும். திப்பிலிக் கொச்சிக்காய் கணியம் ஒரு கட்டுக்குள் இருவது பட்டுகள் இருக்கும். பட்டுப் பட்டாய் கொழுத்த சின்னச்சின்ன வெடிச் சத்தம் கேட்கிறது. முஸ்பாத்தியாய் இருக்கும். கம்பி மத்தாப் புக்களை பூந்திரி என்று சொல்லுவம். அதைச் சுழற் றினால் தங்கத்தை உருக்கி எடுத்த நிறத்தில், அல்லது நிலாவைப் பொடி செய்த நிறத்தில் பொறிகள் பறக்கும். நான் கம்பி மத்தாப்பைக் கொளுத்திச் சுழற்றும் பொழுது, அம்மாவின் முகம் என்னமாய் பிரகாசமாய் மலர்ந்திருக்கும்? ''எல்லாத்தையும் சுட்டுப் போடாதேயுங்கோ .. நாளைக்குப் பொங்கல் பானைக்கும் தேவை!'' என்று ஆச்சி அடிக்கடி நினைவு படுத்துவா...

புது அடுப்பிலை, புதுப்பானை வைத்து சூரிய ஒளி நன்றாக விழக் கூடிய முற்றத்திலே தான் பொங்கல் நடக்கும். அந்த இடத்தில் மணலைத் துடைத்து, வெறுந்தரையாக்கி, இளங்கன்றுச் சாணத் தால் அம்மா மெழுகி வைச்சிடுவா. சீனவெடி கொளுத்தி, மத்தாப்புக் கனவுகளிலே தூங்கிய நாய் கள் எழும்பி முழிப்பது முற்றத்தின் புதுக் கோலத்திலே தான்.

பொங்கல் அன்று அதிகாலையிலே, பெண்கள் தோய்ந்து முழுகி விடுவார்கள். தலை முடியுடன் வெள்ளை ரவுக்கை ஒன்றைச் சேர்த்து முடிந்திருந் தால் அம்மா முழுகிவிட்டார் என்று அர்த்தம். குத்துவிளக்குகள், சருவச்சட்டிகள், தாம்பாளங்கள் எல்லாம் புளியும் சாம்பலும் போட்டு அம்மா மினுக்கி வைச்சிருப்பா, பவுணிலை செய்ததுபோல மினுங்கும். பொங்கலுக்கான சாமான்கள் எல்லாம் பெரிய திண் ணையிலே பக்குவமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கும். வாழைப்பழத்திற்கு மூழ் வெட்டுவது, இளநீர் சீவி எடுப்பது ஆகியன பொங்கல் துவங்கும் வரை காத் திருக்கும்.

சடைச்சிருக்கும் கறுத்தக் கொழும்பான் மாமரத் துக்குக் கீழே இருந்துதான் ஆச்சி, அம்மா, அக்கா ஆகிய 'பெண்டுகள்' வேலை பார்ப்பினம். அம்மாவும் அக்காவும் திருவலைக் குற்றியில் இருப்பினம். ஆச்சி எப்பவும் ஒரு மேஸ்திரி போல. அவவுக்கென்று ஒரு பலகைக் குத்தி இருந்தது. அது அவவின்ரை முதிசம் போலை!

பொங்கல் உலையில் யார் முதலிலை அள்ளிப் போடுவாரோ, அவர்தான் பொங்கல்காரர். பொங் கல்காரன் தோய்ஞ்சு வந்தவுடன் கோலம் போடத் துவங்குவார். வசதியைப் பொறுத்து மற்றவர்கள்



அவருக்கு உதவி செய்யலாம். நல்ல நேரம் பார்த்து அம்மா செய்த அடுப்புக்கற்கள் மூன்று அடுப்பாக வைக்கப்படும் புதுப்பானையைக் கழுவி அதில் அளவுக்கு நீர்வைத்து, கழுத்தைச் சுற்றி மஞ்சள், இஞ்சிமர செடிகளுடன், மாவிலைத் தோறணமும் கட்டப்படும். அந்தப்பானை முதலிலே, மூன்று சிரட்டைகளினாலான அணைப்பில் வைக்கப்படும்.

பால் தேங்காய்ப்பால் ஆகியன உரிய அளவில் விடப்படும். பொங்கற்காரன் பானைக்கு விபூதிப் பூச்சுக்கள் வைச்சதும், பொங்கல் பானை அடுப்பிலே ஏற்றப்படும். அப்போது சீனவெடிகள் டம்பலாய் வெடிக்கும். பானை எத்தனை மணிக்கு அடுப்பிலே ஏற வேண்டும் என்பதைப் பெரிய மாமா பஞ்சாங் கத்தைப் பார்த்துச் சொல்லிப் போடுவார்.

---



ஒருவர் :- நான் ஒரு கொள்கை வச்சிருக்கின்றேன்

மற்றவர் :- அது என்ன கொள்கை?

ஒருவர் :- சீ......எண்டு துப்பிற சீதனம் வாங்கிறதில்லை சீர்வரிசை வாங்குவன்...

- செல்வி கிருஸ்ணா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் அடுப்புக்குக் கண்டகண்ட விறகுகளை வைக்க அப்பையா விட மாட்டார். நல்லாத்தணல் விழக்கூடிய காட்டுக் கம்புகளைத்தான் வைப்பார்: அடுப்பை மூட்டுறதுக்குப் பனம் பன்னாடை பயன் படும். எல்லாப் பக்கமும் ஒரே அளவான தீ நாக்கு களை எழுப்பி அடுப்பு எரிந்தாற்றான் அவருக்குப் பத்தியம். பொங்கி, பால் நுரைகள் பானையின் விளிம்பிலே நர்த்தனமாடி, சடுதியாகச் சரிந்து அடுப் புக்குள் கொட்டுப்படும். அப்பையா 'அரோகரா' போடுவார். ஆச்சியின் நாக்கு இலேசான குரவை ஒலி எழுப்பும். கொடிக்கம்பிலே கட்டப்பட்டிருந்த சீன வெடிப் பட்டுகள் எல்லாம் ஏக காலத்தில் வெடிக்க விடப்படும். இந்தச் சமயத்திலே, பென் னம் பெரிய சருவச்சட்டியிலே கழுவி வைக்கப்பட்ட பச்சையரிசியும், பயறும் பொங்கல் பானையிலே போடப்படும். பொங்கற்காரன் அடுப்பினை மூன்று தரம் வலம் வந்து பக்தி சிரத்தையுடன் இரு கை களாலுங் கோலி, மூன்று தடவைகள் பானைக்குள் அள்ளிப் போடுவார். அந்த நேரம் பென்னம் பெரிய சீன வெடிக் கோர்வையைக் கொளுத்தும் அப்பையா மாவடிப் பக்கமாக வீசி, ஆச்சியின் ஏச்சை வாங்கிக் கொள்ளவும் தப்பமாட்டார். பொங்கல் அடிப்பிடிக் காமல் அடிக்கடி கிண்டித் துழாவ வேணும். சரியாக நேரம் பார்த்து, அன்று திருவப்பட்ட தேங்காய்ச் சிரட்டைகளை அப்பையா அடுப்புக்குள் சொருகுவார். நெருப்பைப் பிரித்து, பொங்கலை அமிழ விடும் பொழுது, சிரட்டைத் தணல் அளவான சூட்டைக் கொடுக்கும் என்பது வாகடம்.

பொங்கல் சரியாகப் பதத்துக்கு வருவதை ஆச்சி மேற்பார்வை செய்வா. பெரிய வாழை இலை யிலே படையல், அந்தக் காலத்தில் கிடைக்கக் கூடிய அத்தனை பழங்களும் படையலுக்கு ஆகும். வாழை முக்கியம் கரும்பு, மாம், மாதுளை, தோடை கிடைக் கும் 'சீசன், தப்பியதால் பலாப்பழம் கிடையாது. படையல் நடக்கும் போதும் ஒரு பாட்டம் சீனா வெடிகள் வெடித்து ஓயும். படையலைத் தண்ணீர் தெளித்துப் பிரித்த பிறகு, தட்டிலே வாழை இலை போட்டு, எல்லாருக்கும் பொங்கல் பரிமாறப்படும்.

பொங்கல் முடிந்ததும் ஆண்கள் ''தையும் பிறந் தது: புது வழியும் பிறந்தது!'' என்கிற நம்பிக்கை யிலே தங்கள் அலுவல்களைக் கவனிக்க இறங்குவர், அயலட்டையிலும், உறவுக்குள்ளும் அந்தத் தைக்குப் பொங்காதவர்களுடைய வீடுகளுக்கும். புத்தம் புதிய மூடற்பெட்டியிலே பொங்கல் அனுப்பிவைத்த பிறகு தான் அப்பையா உசும்புவார்.

வெள்ளைக்காரனுடைய ஆட்சிக்காலத்திலும் பொங்கலுக்குப் பொதுவிடுமுறை நாள். எனவே எங் களுக்கு நல்ல கும்மாளம் சின்ன அண்ணர் மாட்டுப் பொங்கலுக்கு என்று சில சீனவெடிக் கட்டுக்களை ஒளிச்சு வைச்சுக் கொள்ளுவார். அப்பையா அதற்கு எப்பவும் ஆதரவு.

சின்ன அண்ணன் சீன வெடிகளில் சில விளையாட்டுக் களை செய்து காட்டுவார். பெரிய சீன வெடி ஒன்



றைப் பற்ற வைச்சு, அது வெடிப்பதற்கு முன்னர் ஒரு தகரப் பேணியால் மூடிப் போடுவார். அது புதினமான சத்தத்துடன் வெடிக்கும். பேணி யும் ஆகாயத்திலை கிளம்பி, சப்பிழிஞ்சு கீழே விழும். திரிநூர்ந்து வெடிக்காத சீனவெடிகளை எல்லாம் பொறுக்கி 'V' போல மடக்கி, மருந்திலை தீ வைப்பார். அது 'புஸ்' ஸென்று எரிஞ்சு சக்கரம் போல சுத்தும் வெடிகளின் மருந்தை நூல் போல் இழுத்து றிமோட் கொன்றோலில் வெடிகளை வெடிக்க வைப்பார். ஒரு பலகையில் ஆணியால் துவாரம் போட்டு அதற்குள் ஆணியை வைச்சு, ஓட்டை நாகேசர் புளுகிக் கொண்டிருக்கேக்க, கோடாலி வெடி போல அடிச்சுத் திடுக்கிட வைப் பார். நெருப்புக்குச்சி மருந்திலும் கோடாலி வெடி இணக்குவார். பெரிய மாமாவிடம் பூவரசம் கம்பு தூள் பறக்க அடிவாங்கிய பிறகுதான், சின்னண்ண னின் சீன வெடி விளையாட்டு நிற்கும்.

சீன வெடிகளின் ஒலியிலே, புதுப் பொங்கல் உண்டு மகிழ்ந்த மண்ணிலே . இன்று சீன இராணுவ ஊர்திகள் குண்டு மழை பொழிகின்றன .. சின்னண் ணன் செய்த 'றிக்ஸ்' உதவுமா ?

- நனவிடை தோய்தல் என்ற நூலில் இருந்து

தொகுப்பு:-
செ. ஸ்ரீ கோவிந்தசாமி

---

சுடலை ஞானம்

நாம் ஒவ்வொரு நாளும் சுடலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றோம். ஆனால் சுடலைக்கு எவ்வளவு தூரத்தில் நிற்கின்றோம் என்பது யாருக் குமே தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மான் எனக் கருதி ஒரு பெண்ணை ஜப்பானிய வேட்டைக்காரர் சுட்டுக் கொன்றார். இச்சம்பவம் ஓசாக்கா நகரான ஹியோக்காவில் இரண்டு மாதங்கட்கு முன்பு நடைபெற்றது. புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு மூங்கில் புல் சேகரித்துக் கொண்டு நின்ற பெண்ணிற்கே இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டது.

இனமத சிறுபான்மையினரைக் கிரீஸ் நாடு துன்புறுத்துவதாக மனித உரிமைச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. மசிடோனியசிலாவியர்களும், ஜெஹோவாவின் சாட்சிகள் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களுமே இவ்வாறு துன்புறுத்தப்படுகிறார்களாம்!

நுவரேலியாவில் விசர்நாய்களின் தொல்லை அதிகரித்து உள்ளது, மட்டக்களப்பில் இரவில் றோட்டில் படுக்கும் மாடுகளின் தொல்லை நீங்கியபாடாக இல்லை.

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் இருக்கவேண்டிய உப தபால் நிலையம் 1 மைல் தூரத்தில் உள்ள டச்பார் பகுதியில் அமைந்துள்ளது- இதனால் முகத்துவாரம் மக்கள் 1760 யார் நடந்து செல்கின்றார்கள். நடந்து வரும் வழியில் தேநீர்க்கடைகளும் குறைவாம்!

சென்ற மாதம் 06ம் திகதி சிவனொளிபாத மலையில் ஏற முயன்ற ஜேர்மன் உல்லாசப் பிரயாணி இரண்டு காடையர்களால் குத்துப்பட்டார். ஆயினும் குத்துவாங்கிய அப்பிரயாணி திரும்பித் தாக்கினார். குத்தியவர்கள் கத்தியுடன் ஓட்டம் பிடித்தனர். இது அல்லவா வீரம்?

உலகம் நிரந்தர சோசலிஷப் பாதையை நோக்கி நடை போடுகின்றது. பிரபுத்துவ முறைகளை ஒழித்துக் கட்டி விட்டு இறுதியில் உலகில் சோசலிஷம் நிலை நிற்கும். இதனை ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. இவ்வாறு ராஜா கொல்லுரே எம். பி. அவர்கள் பேசியுள்ளார்.

சலரோகம் உள்ள பலர் சீனி கலந்த தேநீர் அருந்துவது கிடையாது. ஆனால் சாராயம் நன்கு குடிக்கின்றனர். தேநீரை விடச் சாராயத்தில் அதிகளவு சீனித்தன்மை. கலந்திருப்பது அவர்கட்குத் தெரிய வில்லை.

## அழகான முடிவுப் போட்டி
## இல. - 02

சுவைத்திரள் வாசகர்களே......! இதோ உங்களுக்காக அழகான முடிவுப் போட்டி ஒன்றினை அறிவித்து உள்ளோம். இயலுமெனில் உங்கள் கற்பனையை இங்கே தட்டி விடுங்கள். தரமான ஆக்கங்கள் இரண்டிற்கு தலா ரூபா 100 வீதம் பரிசு உண்டு.

**முன்கதை**

விக்னேஸ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பட்டதாரி மாணவன். அவனின் வீடு வாழைச்சேனையில் அமைந்துள்ளது. வந்தாறுமூலையில் இருந்து 'பஸ்' இல் அவன் வெளிக்கிட்டு வாழைச்சேனை வந்தபோது பி. ப. 5.30 மணி அவன் நடந்து சென்றான். எதிர்பாராத விதமான அவனின் வலது கால் மிதி வெடியில் சிக்கியது. கீழே இருப்பது மிதிவெடி. காலை எடுத்தால் உடனே மிதிவெடி வெடிக்கும். இந்தச் சிக்கலில் இருந்து எப்படி விடுபடுவது? அவனின் இருதயம் ஓராயிரம் சம்மட்டிகளால் தாக்கப்படுவது போல் இருந்தது............

(முடிந்தால் முடியுங்கள்)

இதனை வெட்டி அனுப்புக.

**அழகான முடிவுப் போட்டி**
சுவைத்திரள் 105/1, திருமலைவீதி
மட்டக்களப்பு.

---

**கவிக்கதிர் வீச்சு.**

அவன் ஒரு நண்பன்
இவனின் மரணஅஞ்சலி
புதினத்தாளில் புதையுண்டு இருந்தது.
ஐயோ நண்பா என்று அலறி
புதினத்தாளில் முகத்தைப் புதைத்தேன்
இன்னொரு அதிர்ச்சி! இன்னொரு
அதிர்ச்சி!
அந்த அஞ்சலி இரண்டாம் ஆண்டு!!
- இல்லாடி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் தோன்றியதில் இருந்து எத்தனையோ ஜீவராசிகள் தோன்றிய இடையிலேயே அடியோடு மறைந்து விட்டன. ஆனால் 40 கோடி ஆண்டுகளாக நிலைத்திருப்பது சரப்பான் பூச்சிதான்.

- முத்தாரம் - 89 நன்றி

அண்மையில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குப் பட்டிப்பளையில் இருந்து ஓர் ஆசிரியர் தானும் தெரிவு செய்யப்படவில்லை எனக் குறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் வீரகேசரி 7 - 1 - 94

நமீபியாவில் மிருகக் காட்சிச் சாலைக்குள் நுழைந்த ஒருவர் மாம்பழம் திருட எத்தனித்தபோது சிங்கம் ஒன்று அந்த நபரைப் பிடித்துக் குதறிக் கொன்றது.

(ராய்ட்டர்)

விஹாரமாதேவி பூங்காவில் சந்தோசமாகப் பொழுதைப் போக்கிய காதலர்கள் தைமாத முதல் பகுதியில் இடியினால் தாக்குண்டனர். காதலி மரணம் அடைந்தார். காதலன் நினைவிழந்தார், காதலர் மீது காலனுக்கு ஏன் தான் இந்தக் கோபம்? சே...... இதுதான் விதியா?

## அழியும் கோயில்கள்

மூதூர்ப் பிரதேசத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைவ மக்கள் வாழ்கின்றார்கள். அறுபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் இங்கு உள்ளன. 9 பிரசித்தி பெற்ற கோயில்கள் தொடக்கம் பல கோயில்களும் இன்றும் பாழடைந்து கிடக்கின்றன. இந்து கலாசார அமைச்சு இதனைக் கவனிக்குமா? எனப் பத்திரிகைகட்கு எழுதிய கடிதம் ஒன்றில் திருமலையைச் சேர்ந்த க. குலநாயகம் கேள்வி ஒன்றினை எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் 25 கடைகளில் கேட்டு அறிந்து கொண்ட விசயம். இங்கு அதிகம் விற்பனையாவது நுளம்புத்திரி. அதிகம் விற்கும் பால்மா 'அங்கர்', அதிகம் விற்பனையாவது சினிமாப் பாட்டுப் புத்தகம்.

எமது பத்திரிகையில் காற்பக்க விளம்பரம் போடுமாறு ஒரு ஓடர் வந்தது. சற்றும் எதிர்பாராத விதமாக 'கொம்போசிட்டர்' பெரிய தவறு செய்து விட்டார். அவர் போட்ட காற்பக்க விளம்பரத்தைப் பார்க்க விரும்புகின்றீர்களா? பார்க்க கடைசிப்பக்கம்.



★ ஆண் : பெண் புத்தி பின் புத்தி

★ பெண் : கல்யாணம் முடிக்க முன்பு பின்னால் திரிந்த புத்தி யாருடையது.

★ ஆண் : ? ? ?

- கல்லடியான்

## நகைச்சுவைக் கவிதைப் போட்டி இல. 02



சென்ற இதழில் மேலேயுள்ள படத்துக்கு நகைச்சுவைக் கவிதை எழுதித் தருமாறு வாசகர்களைக் கேட்டிருந்தோம். எமக்குக் கிடைத்த கவிதைகளுள் பரிசு பெறும் கவிதை பதுளை கோட்டைமுனை வாகிட் குத்தூஸ் எழுதிய கவிதையாகும். மற்றவை பாராட்டுதல்கள் பெறுகின்றன

( தொ + ஆ + ர் )

### காலமிப்போ மாறிப்போச்சு !... ..

பரிசு பெறும் கவிதை

முன்னமெல்லாம் என்னசனம் !
எண்ணும் போது நெஞ்சில்கனம் !
மூன்றுபேராய்க் குந்தியிருக்கிறோம் !
அந்தக் காலம் என்ன சந்தோஷம் ?

★

பனையின் கீழ் அமர்ந்திருக்கிறோம் !
மனைமக்களை மறந்திருக்கிறோம் !
வினைவருவதை தெரிந்திருக்கிறோம் !
சுவையில்லாது அருந்திக்களிக்கிறோம் !

★

முட்டிதட்டி வாய்போட்டு -
சட்டைவேட்டி கழன்றுவீழ...!
வெட்டிச்சண்டை நாம்பிடித்த -
காலமிப்போ மாறிப்போச்சு !

★

இன்னுமிருந்தால் ஆமிவருவான் -
கன்னம்வெடிக்க நாலுதருவான் !
நல்லாய்வெறி நமக்கேறு முன்னம் -
போய்ச்சேருவோம் நம்இல்லம் !

- கோட்டைமுனை வாஹிட் ஏ. குத்தூஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மக்கள் மேன்மக்களே !

பாராட்டுப் பெறும் கவிதை

கள்ளருந்தும் போது
''வெள்ளாளர்'' என்பதும்
''பள்ளர்கள்'' என்பதும்
உள்ளத்துக்குள்ளேயே
ஒளிந்திருக்கும் !

உள்ளே போன கள்
வெள்ளம்போல் வெளியே
தள்ளியபின் சிறுநீராய்
தள்ளாட்டம் நின்று,
தலை கனக்கும்

''பள்ளிச்சி பள்ளன்
தள்ளிநில் என்பவர்கள்
கள்ளருந்தும் போது
மெல்ல மறந்திடுவார்
மேன்மக்கள் இவரே.

- கு திருமால்
3 ம், குறுக்குத் தெரு,
அமிர்தகழி
மட்டக்களப்பு

பனையடியில் பிளாதேடும் பழந் தமிழா!

பாராட்டுப் பெறும் கவிதை

''புக்காரா'' புகுந்திடினும்
''சுப்பர்சோனிக்'' சுற்றிடினும்
பரிதவிக்கும் தமிழினமாய்
''பங்கருக்குள்'' பதுங்கிடாமல்
பற்றறுந்த மனிதர்களாய்
பனையடியில் ''பிளா'' தேடும்
பண்டையத்துப் பழந்தமிழா - உந்தன்
''பொம்மனாட்டிகளை - அன்று
''பொம்பர்கள்'' தான் வந்து
பொசுக்கென்று பிரித்ததுவோ ?

கா. யோகேந்திரன்
''துளசி''
ஆரையம்பதி - 2

''படை திரண்டு வந்தாலும்''

செல்லடிகள் பல பட்டு
சிதைந்துபோன பனையின் கீழே
கள் அருந்தி மூவர்
களிப்புறும் காட்சி பாரீர்
விருந்தாக எண்ணி இவர்கள்
வீணான போதை தர
அருந்துகிறார்கள் அதனை
அமுதம் போல் சுவைபடவே.
சங்கீதக் கடம் போல் கள்ளுக்
குடம்படும் பாட்டைப் பாரும்
தனக்கேதும் மிஞ்சாதோ எனத்
தவித்திடும் இன்னோர் உள்ள
படைதிரண்டு வந்தாலும்
பார்த்திடுவோம் ஒருகை என்று
பிளாவதனில் கள் அருந்தும்
பேயனின் தோற்றம் பாரும்
ஈழத்தில் தமிழர்கள்
இருந்து தான் என்ன பயன்
இறப்பது விரைவில் என்று
எண்ணித்தான் குடிக்கின்றாரோ?

- ஆக்கம் -
எஸ். நல்லதம்பி
தரக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்
காகிதஆலை வாழைச்சேனை

கள்ளோ . காவியமோ!

★ பனை மரத்தின் கீழ் இருந்து
பால் தன்னைக் குடித்தாலும்
'கள்' என்று கதையளப்பார்
உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்

★ கள் உண்ட நெஞ்சமதில்
உள் ஒன்றும் தரிப்பதில்லை ! - அவர்
வள் என்று கத்தினாலும்
நல் உள்ளம் கொண்டவர்கள்

★ குடிகாரன் பேச்செல்லாம்
விடிந்தெழுந்தால் போச் சென்பர்
'வடி' தன்னைக் குடித்தே நாளும்
பிடி சாம்பராகிடுவர்.

★ அளவோடு அருந்தினால்
மது கூட மருந்தாகும்
அளவுக்கு மிஞ்சிடுங்கால்
அது கூட நஞ்சாகும்.

★ யாழ் குடாவில் பனங்கள்ளு சீசன் என்றால்
'யாழ்தேவி' யில் பயணிகள் இடநெருக்கடி
பாழ் பட்டுப் போவார் எல்லாம்
'கோள்' போட்டுச் சென்றிடுவார்.

★ உடல் சூட்டை தணிப்பதற்கோர்
உகந்த பானம் உதுவென்பர்
'பிளா' வினில் கள்ளேந்தி
விலா புடைக்கக் குடித்திடுவார்.

★ தள்ளு வண்டி நடை கண்டு
கள்ளு வண்டி போகு தென்பார்
எள்ளி நகை யாடினாலும் - அவர்
ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்.

ஸ்ரீகோவி - எழிலன்
இந்துக் கல்லூரி, வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விமர்சனப் பகுதி

## மலரும் வாழ்வு

( குறுங்காவியம் )




ஆசிரியர்: **கண. மகேஸ்வரன்**
( தாரகை ஆசிரியர் )

**21,** சுப்பையா லேன், மட்டக்களப்பு.

ஆசிரியர் திரு. கண மகேஸ்வரன் அவர்களால் பாடப்பெற்ற குறுங்காவியமான ''மலரும் வாழ்வு'' என்ற குறுங்காவியம் கிடைக்கப் பெற்றோம். சிறையில் இருந்த நேருஜி, அண்ணா, வினோபா எல்லோரும் நூல்கள் எழுதினர். ஆனால் நோயுடன் போராடிய ஒரு எழுத்தாளர் தமது அனுபவங்களை முன்வைத்து ஒரு குறுங்காவியம் பாடிச் சாதனை படைத்துள்ளார். அவர் எழுத்தாளர் திரு. கண மகேஸ்வரன்.

துன்பத்தில் கடவுளைப் போற்றுபவரும் உண்டு. தூற்றுபவரும் உண்டு. துன்பத்தில் மான்டாரைப் போற்றும் கவி வல்லமை ஆசிரியருக்கு உண்டு என்பதை அவரின் கவியுள்ளம் தொட்டுக் காட்டுகின்றது. சலோம் மருத்துவமனையில் அவர் பட்ட பாடுகள் கவிதை மலரம்புகளாகி '' நல்லவனைப் பிழியினும் அத்தராகும்'' என்ற தத்துவத்துக்கு ஏற்பக் கவி நறுமணம் புரிகின்றது,

இந்த மின்சார யுகத்தில் கம்பன் காவியத்தையும், மில்டனின் 'சுவர்க்க நீக்கத்தையும்' தட்டிப் பார்க்க மனம் இருந்தாலும் 3 நேரப் பசியும் எம்மைத் தட்டிப் பார்ப்பதால் அன்று பார்த்து முடிக்கக் கூடிய குறுங் காவியங்கள் நாட்டுக்குத் தேவை, அந்த அளவில் மலரும் வாழ்வு நறுமணத் தென்றல்!

மலரும் வாழ்வு குறுங்காவியத்தின் கவிதை ஓட்டம் மிக நன்று. ஆயினும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் மொழி பெயர்த்த ஆசிய ஜோதி ( Light of Asia ) கவிதைத் தொகுப் பின் கவி இழையும் ஏனோ இங்கு தொக்கு நிற்கின்றது.

கண மகேஸ்வரன் கவிதைகள் தத்துவ இழையோட்டத்தை நாடி நிற்கின்றது. ஆனால் அப் புலம் அவருக்கு விளங்கியதா என்பது எமக்குத் தெரியவில்லை.

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

## கச்சேரிப் புதிர்

அன்பின் சுவைத்திரள் வாசகர்களே... மட்டக்களப்புக் கச்சேரி தாபனக் கிளையில் பணி புரியும் செ. பத்மநாதன் பின்வரும் 10 கேள்விகளை உங்களிடம் கேட்கின்றார். சரியான பதில் அளிக்கும் அதிர்ஷ்டசாலியான 5 வாசகர்கட்குத் தலா 20 ரூபா வீதம் அவர் பரிசளிக்க உள்ளார். கச்சேரி ஊழியர்கள் எவரும் கலந்து கொள்ள வேண்டாம். இது அன்பான வேண்டுகோள். உங்கள் பதிலுடன் கீழே உள்ள கூப்பனையும் வெட்டி அனுப்புங்கள்.

கேள்விகள்

(1) கோள்களில் எதிர்ப் பக்கமாகச் சுழல்வது எது?
(2) கிரிக்கெட் பிச் ஒன்றின் நீளம் யாது?
(3) இலங்கையில் முதலில் வெளியான ஆங்கிலப் பத்திரிகை யாது?
(4) பக்கிங்ஹாம் மாளிகையில்யார் வசிக்கின்றார்கள்?
(5) நளவெண்பா பாடியவர் யார்?
(6) ஹிரோசிமாவில் போடப்பட்ட அணுகுண்டால் தாவர வகைகள் அழிந்தன. ஆனால் ஒரேயொரு தாவரம் மீண்டும் வளர்ந்தது அது யாது?
(7) சார்க்அமைப்பு எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
(8) இன்டர்போல் என்றால் என்ன?
(9) உலக ஆசிரியர் தினம் எந்த ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகின்றது?
(10) இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற இந்தியர் யார் ?

இதனை வெட்டி அனுப்புக,

கச்சேரிப் புதிர்
C/O செ, பத்மநாதன்
தாபனக் கிளை
கச்சேரி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோயும் தந்தேன் நொடித்திட வைக்கிறான்
நோயும் இல்லையேல் நொடிப் பொழுதேனும்
தேவனை மறந்தே திரிவான் என்பதை
நோயுற்ற மனிதன் உணர்ந்திடத் தானோ"

என்ற கவிதை அடிகள் எமக்கு அவரின் தத்துவக் கண்ணோட்டத்தை இனம் காட்டுகின்றது.

கண. மகேஸ்வரனிடம் இருந்து காவிய உலகம் நிறைய எதிர்பார்க்கின்றது.

## கைதிப் புறாக்கள் (கவிதைத் தொகுதி)

கவிஞர் மடவளை கலீல்

கவிஞர் மடவளை கலீலின் கவிதைத் தொகுதி எமக்குக் கிடைக்கப் பெற்றது. அவரின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. மனித குலத்தையும், கலையின் இணைப்பையும் ஒன்றெனக் கருதிக் கவி எழுதுபவர் மடவளை கலீல் என மேமன்கவி தனது முன்னுரையில் கூறியுள்ளார். இது பொருத்தமானது என நூலின் உள்ளே சென்றால் அறிய முடியும்.

அவ்வப்போது இந்த நாட்டின் நாளேடுகளிலும் இந்தியாவலு இருந்து வெளிவரும் பிரபல சஞ்சிகைகளிலும் கலீல் எழுதிய கவிதைகளே இந்தக் கைதிப் புறாக்களை அழகுபடுத்துகின்றன. இக்கவிதைகள் சமுதாயம் எப்படி இருக்கவேண்டும். என்ற பார்வையினை அழகுற எடுத்துக் காட்டுகின்றது. மொத்தமாக எண்பத்து எட்டுக் கவிதைகள். கவிதைகளை வாசித்தால் எதை ரசிப்பது எதை விடுவது என்ற ஆதங்கம் தோன்றும் விஷம் உண்ணலாமா தூய வாழ்வு விசப் பறவைகள், சீதனம் என்பன எம்மைத் தொட்டுச் சென்ற கவிதைகள்.

கொள்ளைக் காரனே - நீ
சொத்துக்களைக் கொள்ளை
அடிக்கவில்லை...... உன்
தன் மானத்தைக்
கொள்ளை அடிக்கின்றாய்.

கள்வனே - நீ
பொருட்களைக் களவாடவில்லை - உன்
நல்லெண்ணத்தைக்
களவாடுகின்றாய்.

என்ற அடிகள் எமது மனதைச் சுடும் வல்லமை வாய்ந்த கவிக் கூறுகள் இப்படிப்பல. இவ்வாறு முத்தான பல கவிதைகளைத் தந்த இவர் தனிப்பட்டவர்களைத் துதிபாடும் கவிதைகளை ஏன் சேர்த்தார் என்பது புரியவில்லை. மொத்தத்தில் கவிதைத் துறையில் மடவளை கலீலுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. இவரின் முகவரி

இல 191, மானம்பொட,
உக்குவலை.

### அடுத்த இதழ் விமர்சனங்கள்

கவிஞர் இரா. தவராஜா - தொலைந்து போன சுதந்திரங்கள் (கவிதைத் தொகுதி)

குருட்டு வெளிச்சம் (திக்குவல்லைக் கமால்) சிறுகதைத் தொகுதி

## வெட்கம் இல்லாத செய்திகள்

1. நாடு பூராவும் 15 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஒரு 1000 வீடுகள் தானும் தோட்டத் தொழிலாளர்கட்குக் கட்டிக் கொடுக்கப்படவில்லை.
   நவரத்தினம் எம். பி

2. மட்டக்களப்பு வைத்தியசாலையில் பஞ்சுக்கும் தட்டுப்பாடாம் - செய்தி

3. புத்தளத்தில் வெள்ளம் காரணமாக அரைக்கோடி பெறுமதியான உப்பு வெள்ளத்தில் கரைந்தது. - செய்தி

4. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் பாகிஸ்தான் நிறுவனம் ஒன்றுக்கு விற்கப் பட்டதால் சீமெந்து பக்கட் ஒன்றின் விலை ரூபா 250/- ஆக உயர்ந்தது.
   - செய்தி

5. ஐ. தே. க. ஒருபோதும் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டதில்லை.
   - அமைச்சர் மன்சூர்

6. காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைவார்.
   - செய்தி




★ எனது மகன் பொறுப்புணர்ச்சி உள்ளவன்
★ எப்படி ?
★ வயிறு முட்டக் குடித்தாலும் வீட்டுக்கு வந்துதான் வாந்தி எடுப்பான்

- அம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்தோசம் வேண்டுமென்றால் இங்கே
கொஞ்சம் என்னைப் பாரும் கண்ணால்!

உங்களுக்காகவே வரிவிக் கரையோரம் நான் பார்த்திருக்கின்றேன்.

★ உள்ளூர், வெளியூர் ரெலிபோன் அழைப்புக்கள்,

★ தபால் அட்டைகள், முத்திரைகள்,

★ தந்தி, மணியோடர்,

★ I. D. D. அனைத்துக்கும்.

உங்கள் சேவைக்காகக் காத்திருக்கின்றேன்.
கண் பூத்திருக்கின்றேன்: ! !

மட்டக்களப்பின் முதலாவது ஏஜன்சித் தபால் நிலையம் நானே.

வாருங்கள்...... சொல்லுங்கள்......செய்து முடிக்கின்றேன்.

# ஈஸ்வரி முகவர் தபால் நிலையம்

02, லொயிட்ஸ் அவனியு, மட்டக்களப்பு.

---

வெற்றிக்கு வேல்!
அழகுக்கு முருகன்!!
அழகும், தரமும், உறுதியும், உத்தரவாதமும், மிக்க
உள்ளூர் விளைபொருட்களின் களஞ்சியம்
வேல்முருகன் ஸ்ரோர்ஸ்
வாடிக்கையாளர்களே..... ஞாபகம் வைத்திருங்கள்.

# வேல்முருகன் ஸ்ரோர்ஸ்

இல: 17, யூ. டி. ஏ. பில்டிங்,
மார்க்கெட்,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2532



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத்திரள் முழு நீளச் சிரிப்பகராதி



காதல் - உயர் அழுக்கம்

காதல் தோல்வி - தாழ் அமுக்கம்

நாய் - சாதி வித்தியாசத்தால் இருக்கும் இடங்கள் வேறுபடும்!

பல் - ருசி பார்க்கத் தெரியாத மனித உறுப்பு

எழில் செவ்வாய் - திருவாளர்கள் எட்டிப் பார்க்காத கிரகம்

பானை - பசித்த நேரம் எட்டிப் பார்க்கும் கிணறு

டொலர் - இது இருந்தால் கொலரை நிமித்திக் கொண்டு நடக்கலாம்

பத்து ரூபா - ஏழை நிலா

விசா - பறவையாகப் பிறந்தோமில்லை என்பதை இது ஞாபகம் ஊட்டும்

இடிமுழக்கம் - வானத்தில் 'கிளிப்' கழன்ற 'கிறனைட்'

---

சித்திர புத்திர செய்தி

இயமன் :- சித்திரபுத்திரா பூலோகம் போனாயே ஏதாவது புதினம் கொண்டு வந்திருக்கிறாயா?

சித்திரபுத்திரன்:- ஓமோம் ...... பிரபு இந்தப் புது வருஷத்தில் எவனும் காசு கொடுத்து 'டயறி, வாங்கியதை அங்கு காணவில்லை.

இயமன்:- ? ? ?

கில்லாடி

---

'' காதலும் ! ... கல்யாணமும் ! ..

சந்தோஷமாய்
இருக்க...
பெண்ணை காதலி !
சந்தோஷம்
இழக்க..
பெண்ணை மணமுடி!

- கோட்டைமுனை '' முத்து மணி ''

---



அன்பர்களே...... நண்பர்களே... தாய்மார்களே... சகோதரர்களே வணக்கம்......

எனது பெயர் ஆறுமுகசாமி. எனது சொந்த இடம் ஆறுமுகத்தார் திடல். எனக்கு வயது அறுபது நான் ஆறுபிள்ளைகளின் தகப்பன். நான் ஆறு தடவை தேர்தலில் போட்டியிட்டேன். நான் கட்டுக் காசு இழக்கவில்லை. அதனால் மிகுந்த ஆறுதலாக உள்ளேன்.

எனது மூதாதையர்கள் ஆறுதலைமுறையாக அரசியலில் ஈடுபட்டவர்கள். அதனால் ஆறுதலை ஆறுமுகம் குடும்பம். என எம்மை அழைப்பார்கள். நான் ஆறு பிள்ளைகளின் தகப்பன் என்பதால் ஆறி ஆறித்தான் மேடையில் பேசுவேன்......

இன்று என்னை ஆதரித்துப் பேசுவதற்கு ஆறு பேர் வந்தார்கள். அந்த அறுதலி மக்கள் ஆருக்கும் சொல்லாமல் ஓடிவிட்டார்கள். உள்ளூராட்சித் தேர்தல் என்பதால் உள்ளூரில் தான் ஒழித்திருப்பார்கள் எங்கிருந்தாலும் அவர்கள் எதிரிக்கு 'வோட், போடாமல் இருக்க வேண்டும்.

இங்கு எனக்காகப் பேச வந்தவன்கள் பெரிய யோக்கியன்களா? சென்றமுறை எனக்காகக் கள்ள வோட்போட்டு இவர்கள் பொலிசிடம் மாட்டியவர்கள். எனக்காக வோட் போட்டார்கள் என்பதால் நான் இதுவரை எவருக்குமே சொல்லவில்லை. நான் கொடுத்த சாராயப் போத்தல்களை வாக்காளர்கட்குக் கொடுக்காமல் தாமே பாவித்தார்கள். அப்படியானவர்கள் இவர்கள்......

மேலும் இவ்வருடம் நடக்கும் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் எனக்கு நீங்கள் வாக்களித்தால் நீங்கள சந்திக்கக் கூடிய இடமாகக் கொழும்பில் இருப்பேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் நான் கொழும்பில் இருந்தாலும் நீங்கள் மட்டக்களப்பில் இருந்து போன் மூலம் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாரித்தம்பர் ஓர் விமர்சனப் பார்வை

திக்கவயல்



கண்டு, கேட்டு, உற்று அறிவது மனிதனின் தலையாய பண்பு. கேட்பது உற்று அறிவது என்ற மனிதனின் குணங்கட்கு அப்பால் கண்டு அறிவது தான் பாமர மனிதனுக்கும் இயலக்கூடிய ஒன்று. அந்த நோக்கில் கண்டு பிடிக்கக்கூடிய ஒருவர் சவாரித்தம்பர். இரு அடிகளால் அமைந்தது திருக்குறள்.


மூன்று ' காலம்களில் ' அரசியல் தொடங்கிக் கலாச்சாரம் வரை தனது கருத்துக்களை முழங்கி வந்தவர் சவாரித்தம்பர். அவர் எம்முடன் வாழ்வது போன்ற பிரேமை ஏற்படுகின்றது அவர் வாழ்ந்து சென்ற ஒரு தேசபக்தன். அவருடைய ஆத்மாவைத் தமிழர் வாழ்விலே உள்ளடக்கி உயர்வான கருத்துக்களைப் பல ஆண்டுகளாக வெளியிட்டவர் தான் 'சிவா, என்று அழைக்கப்படும் சி. சிவஞானசுந்தரம் அவர்கள். ' சவாரித்தம்பர் ' என்ற பெயரில் அவர் கீறிய கார்ட்டூன்கள் பிரபலமானவை' சின்னக்குட்டி என்பவரும் தம்பர் என்பவரும் பெரும் கூட்டாளிகள். மார்க்ஸ்க்கு ஏங்கல்ஸ் எவ்வாறு உயிர் நண்பரோ அவ்வாறுதான் சின்னக்குட்டிக்குத் தம்பர் அவர்கள். விக்கிரி, சினாச்சி அக்கா தொடங்கிப் பலரும் இவரின் குடும்ப அங்கத்தவர்கள் இக் குடும்ப அங்கத்தவர்களில் பலரை இப்போது நாம் அறிமுகம் செய்ய விரும்பவில்லை, பலர் உங்களுக்கு சீக்கிரத்தில் அறிமுகம் ஆகப் போகின்றார்கள். அரசியல் அறிவில் பெயர் பெற்ற சாணக்கியன் இந்திய நாட்டுக்குச் சொந்தமானவன். கலாச்சார சீர்திருத்தவாதிகள் பூசியஸ் சீனாவுக்குச் சொந்தமானவன். மார்ட்டின் லூதர் என்ற சமய சீர்திருத்தவாதி ஜேர்மனிய நாட்டின் பூர்விக குடிமகன். ஹிட்லரையும், முசோலினியையும் கவர்ந்து உலகத்தை ஆட்டி வைத்த மாக்கியவல்லி இத்தாலிய நாட்டின் முது சொத்து.

அறிவின் சிகரம் இந்நகர்சால் அமெரிக்காவின்சொத்து. உலகளாவிய அறிவின் சொத்து டால்ஸ்டாய் ரஷ்ய மக்களின் பிரதிநிதி. ' பிரதிநிதி ' என்ற சொல் எத்தனையோ அர்த்தங்களை உள்ளடக்கியது.

அத்தகைய கருத்தினில் நோக்கினால் சவாரித்தம்பர் என்பவர் காலத்தின் பிரதிநிதி. அவரை விமர்சிப்பது என்பது இலகுவான விசயமல்ல; நான் விமர்சித்தால் அது முழுமை அடைந்து விட்டது என்பதும் அல்ல, ஆயினும் கால் நூற்றாண்டு காலமாக விமர்சனம் செய்யப்படாது கிடந்த இக்கார்ட்டூன்களை விமர்சிக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

16ம் நூற்றாண்டில் மார்ட்டின லூதர் தனது சமய போதனைகளைத் தொடங்கிய போது " மக்கள் நினைக்கிறார்கள், லூதர் கூறுகின்றார் ", என மக்கள் கூறினர். அஃது போன்று தமிழ் மக்களின் மனச்சாட்சியின் காவலர் சவாரித்தம்பர். தமிழ் மக்கள் மத்தியில்...... வீரம் குன்றிய போது தட்டிக் கேட்க அவர் தயாராக இருந்தார். விவேகம் குன்றியபோது ... சுட்டிக்காட்ட அவர் தயங்கவில்லை.

கலாச்சாரச் சீரழிவு கடைசியில் எங்கு சென்று முடியும் என்பதை அவர் ஊகியாது விட்டது இல்லை. இலங்கை மக்களின் ஒரு கூட்டத்தினர் மலை போல் பணம் சேகரித்து வைத்திருப்பதும்; இன்னொரு கும்பல் அன்றாடம் காய்ச்சிகளாக அலைவதும் சவாரித்தம்பர் அறிந்திருந்த ஒன்று தான்!



எமது அடுத்த இதழில் டாக்டர் காராளசிங்கம் எழுதும் " கிழக்கு டாக்டரின் டயறி " ஆரம்பமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வித்தியாசங்களால் உண்டான போட்டி, பொறாமை, இடைவெளி என்பவற்றால் உண்டான அனர்த்தங்களைச் சவாரித்தம்பர் சொன்னது போல் இன்றுவரை யாரும் சொன்னது இல்லை. சொன்னதை அவர் சித்திரத்தில் கீறிக் காட்டினார். மக்களுடன் மக்களாக நின்று அதைக் கோடிட்டுக் காட்டினார். அதுவே சவாரித்தம்பரின் தனிச் சிறப்பு. திக்கம் என்ற கிராமத்தில் அப்போது ஒரு நூலகம் அமைந்து இருந்தது. அந்த ஊருக்கு நானும் உரிமையாளன். இற்றைக்கு 25 (இருபத்தைந்து) ஆண்டுகட்கு அந்தக் கிராமத்தில் ஒரு நூலகம் இருந்தது. ஆண்டுகள் ஞாபகம் இல்லை. ஆனால் கொங்கோவில் அதன் பிரதமர் லுமும்பா கொலை செய்யப்பட்ட காலம். அந்த நூலகத்தில் தினகரன் பத்திரிகை வரும் சமயத்தைப் பார்த்துச் சிறுவர்களாகிய நாம் இருப்போம். தினகரன் வந்து சேர்ந்தாலும் ஊர்ப் பெரியவர்கள் பார்த்த பின்புதான் அது எமக்குக் கிடைக்கும்- அவ்வளவு தூரம் பொறுமையாக நாம் நின்று பார்ப்பது தினகரனில் அன்று வெளிவந்த சவாரித்தம்பர் கார்ட்டூனைப் பார்ப்பதற்காகத் தான். பார்த்து விளங்கக்கூடிய விசயம் அது ஒன்றுதான். காரணம் அப்போது நாம் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள். சவாரித்தம்பரை வாசித்து முடிந்த பின்பு சிறுவர் கூட்டம் சிரித்துக் கொண்டு ஒவ்வொரு மூலையாகச் செல்லும். காரணம் சிரித்த பகுதியை நாலு பேருக்குச் சொல்ல வேண்டும் என்பது தான். ...நூலகத்தில் சவாரித்தம்பர் பகுதியால் நெருக்கடி ஏற்படவே நான் இப் பகுதியை வாசிப்பதற்காக வேறோரிடத்துக்குச் சென்றேன். அது ஊர்க்கோடியினில் இருக்கும் ஒரு கொல்லரின் வேலைச் சாவடி. அவர் கரவெட்டியில் இருந்து காலையில் வருவார். அதன் பின்பு எனக்குச் சொல்ல வேண்டியது இல்லை. ........ படி மகனே படி .. ... நீயும் ஒரு நாள் நல்ல சவாரித்தம்பராய்த் தான் வருவாய் என அவர் சொல்லுவார். இருபத்து இரண்டு ஆண்டுகட்கு முன்பு நடந்த நிகழ்ச்சியினை இன்று நினைவுபடுத்திப் பார்த்தாலும் வற்றாத இனிய நினைவுகள் சவாரித்தப்பர் என்ற பாத்திரத்துக்கும் எனக்கும் உண்டு.

பிரான்ஸியப் புரட்சி நடந்த கால கட்டம் அரசி உப்பரிகையில் வீற்று இருக்கின்றாள். மேரி அன்ரனாயிற் அவளது பெயர். நாட்டு நிலைமை தெரியாத அரசி அவள். நாட்டு நிலைமை தெரியாது விட்டாலும் நாலு நல்ல மந்திரியாவது பக்கத்தில் இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது. இந்த நாட்டு மக்களுக்கு வாய்க்கக்கூடிய நல்ல மந்திரிகளில் ஒருவராகச் சவாரித்தம்பர் இருந்தார். அகிம்சைக் கோட்பாட்டை அவர் விமர்சிப்பார் அதன் பலாபலன்களையும் எடுத்து உரைப்பார்.

பணத்தின் பெறுமதி பற்றி ஆராய்வார். இருக்கின்ற காசு அத்தனைக்கும் வீடு கட்டிவிட்டு கூப்பன் எடுப்பதற்குக் கடன் பட்டுத் திரியும் புதிய பணக்காரரையும் சந்திக்குக் கொண்டு வருவார். உத்தியோக மோகத்தினால் மனிதன் செய்யும். தவறுகளை எடுத்துரைப்பார்.

அந்த மோகத்தினால் தொழிலாளர்களை அவர்கள் நடாத்தும் முறை பற்றி மனம் நொந்து பேசுவார்.

கனகவிசயர் தலையிலே கல் ஏற்றிய தமிழர், எத்தனையோ விளையாட்டுக்களிலே 'கப்' பெற்ற தமிழன் 58 ஆம் ஆண்டு அகதியாக றோயல் கல்லூரியிலே 'கப்' ஏந்தியதை ஞாபகப்படுத்துவார்

''உரலையும் உலக்கையையும் தூசு மூடுது; அதனால் எங்கடை பொம்பிளையளை நீர் மூடுங்கு'' எனக் குசினிப் பக்கத்தில் நியாயம் சொல்லும் மேதையாகவும் சவாரித்தம்பர் மாறி விடுவார்.

---

வாசகர் கடிதம்

## பானையில் இருந்தால்தானே !

பரீட்சையிலே நன்றாகச் செய்ய வில்லையே என்று பலர் மாணவர்களைப் பற்றிக் குறை பட்டுக் கொள்ளுகிறார்கள். பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் வினாக்களுக்குரிய விடை தெரிந்தால் தானே அதை எழுதலாம். ஆசிரியர் நன்கு கற்பித்தால் தான் விடை எழுதுவது மாணவருக்குச் சுலபமாக இருக்கும். உயர்தர வகுப்பிற்குப் பௌதிகம் (Physics) பயிற்றுவிக்கும் ஆசிரியர் இல்லாமல் மட்டக்களப்பு மத்திய கல்லூரி எட்டு மாதங்களாகச் சும்மா சமாளிக்கின்றது. சும்மா சமாளித்து எழுதினால் நாடளாவிய பரீட்சையில் புள்ளிகள் கிடைக்குமா ?

கணிதம் பயிற்றுவித்த ஆசிரியையும் வேறு பதவிக்குச் சென்று விட்டார். அந்தப் பாடமும் மண்ணாகி விட்டது. ஆசிரியர் பற்றாக் குறையாக இருந்தால் இரண்டு கல்லூரியை ஒரு கல்லூரியாக்கிப் பணத்தை மீதப்படுத்தலாமே! ஏன் சும்மா சமாளிக்கிறார்கள்? என்று விரக்தியோடு அபிப்பிராயப் படுகிறார். ஒரு மாணவனின் தந்தை. இது பற்றி மட்டக்களப்பு கல்விப் பகுதி கண்ணைத் திறந்து பார்க்குமா ?

- (பெயரிடப்படாத மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராஜகம் எங்கு நடந்தாலும் நீதிக்குக் குரல் கொடுத்தவர் சவாரித்தம்பரே. ''கந்தன் அஃறிணை நாய் உயர் திணை என ஆலயப் பிரவேசப் போராட்ட காலத்தில் அவர் கொடுத்த கருத்துக்கள் எத்தனை தாக்கத்தை உண்டு பண்ணியது. அந்தக் கருத்துக்கு நாயகன் முதுபெரும் சிந்தனையாளர் சவாரித்தம்பரே.

கொழும்பு நகர வீதிகளிலே விடிவதற்கு முன்பு சில பணக்காரர்கள், தினகரனை வாசித்து சவாரித் தம்பர் என்ன சொல்கிறார் என அறிவதுண்டு; காரணம், நாமமது தமிழர் என வாழ்ந்து வந்த அத் தமிழர்களின் பண்பாட்டை அவர் சந்திக்குக் கொண்டு வந்தது தான்,

கள்ளிச்செடி வளர்த்த பணக்காரர்கள், டார்லிங் நீங்கள்சாப்பிடா விட்டால் நான் நாய்க்குப் போட்டிடு வேன். எனக் கூறிடும் மனையாள், இவர்கள் யாவரும் சவாரித்தம்பர் கோடிட்டுக் காட்டிய மானிடர்கள். அவர்கள் மீது தனிப்பட்ட கோபம் எதுவும் சவாரித்தம்பருக்கு இல்லை அவர்களின் பாதையைப் புதிய பாதையாக மாற்றவே அவர் விரும்பினார் இதனால் அவரைப் பகைத்துக் கொண்ட மேட்டுக் குட்டியினர் ஏராளம். இதற்கு எல்லாம் விட்டுக் கொடுப்பவர் சவாரித்தம்பா அல்ல.

''நாம் யார்க்கும் குடியல்லோம்'' என்ற மமதை அவருக்கு, அவர் தனது கருத்துக்களைச் சொல்லி வந்தார். ஒரு நாளா? இரு நாளா? தொடர்ந்து பல ஆண்டுகள். ஷேக்ஸ்பியர் கதைகளிலும் பார்க்கச் ஷேக்ஸ்பியருக்குக் கிடைத்த விமர்சனங்களே அதிகம். அஃது போலவு சவாரித்தம்பரிலும் பார்க்க அன்னாருக்கு அதிகம் கிடைக்க வேண்டியவை விமர் சனங்களே. அந்த வகையில் இவ்விமர்சனம் ஒரு முன்னோடியாகத் திகழும் என்பதில் எனக்கு நம்பிக்கை அதிகம். அது மாத்திரம் அன்றி சவாரித்தம்பர் பகுதி யில் வெளிவந்த கார்ட்டூன்கள் யாவும் முழு நூலாக வெளிவரல் வேண்டும் அதுவே கார்ட்டூன் உலகில் ஒரு மைல் கல்லாக அமையும் என்பதில் எனக்கு அதிக நம்பிக்கை.

## சவாரித்தம்பர் இலக்கியம் ஆகின்றார்

Literature helps to understand the life; but criticism helps to understand the literature.

- James teeves

வாழ்க்கையை விளங்கிக் கொள்ள இலக்கியம் உதவி புரிகின்றது; விமர்சனமோ இலக்கியத்தை விளங்கிக் கொள்வதற்கு உதவி புரிகின்றது,

- ஜேம்ஸ் ரீவ்ஸ்

இலக்கியத்தை அதன் வரம்புக்குள் நிற்பாட்டு வதற்குப் பாடுபடுவதுஇலக்கணம். தொல்காப்பியமும், நன்னூலும் கல்லாடமும் மொழிக்கு வரம்பு கட்டுவது மாத்திரம் அல்ல இலக்கியத்தில் செய்யுட்கள் எவ் வாறு அமைய வேண்டும். காப்பியம் எவ்வாறு



## அப்பாடா வந்ததே சிரிப்பு

''விகிதாசார தேர்தல் முறையை விட முன்னைய தொகுதிவாரியான தேர்தல் முறையே சிறந்தது'' இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் கூறியுள்ளார்.

## புகைப்படப் போட்டி

சென்ற டிசம்பர் இதழில் நாம் அறிவித்த புகைப் படப் போட்டிக்கு பல பதில்கள் வந்திருந்தன. அவற் றுள் சரியான பதில்களை அனுப்பி வைத்த ரசிகர்கள் இருவர். அவர்கள்

(1) சே. ராதா
C/O செல்லத்தம்பி G/S/O
ஆரையம்பதி - 01

(2) கோட்டைமுனை, ஏ. வாகிட் குத்தூஸ்
28, தேவாலய வீதி,
பதுளை.

இவர்களின் பரிசுகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். (ஆ+ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைய வேண்டும் என வழிகாட்டுகின்றது. பாமரர்கள் இந்தப் புத்தகங்களை வாசித்து விளங்க முடியாமையால் அந்தப் பக்கம் போக அஞ்சினர். ''யாப்பருங்கலக்காரிகை., என்ற நூலைப் பதிப்பித்தேன்; 25 வருடகாலம் விற்பனை ஆகாது கிடக்கின்றது. என வானதி திருநாவுக்கரசு எழுதியுள்ளார். விற்பனை ஆகாத காரணத்தை ஆராய்ந்தால் மக்கள் விரும்பாத ஒன்றை மக்கள் விரும்பாத நேரத்தில் இலக்கியவாதிகள் கொடுப்பது தான்:

மக்களிடத்துப் போவதற்கு முன்பு மக்களின் மொழியை ஒரு இலக்கியவாதி வசப்படுத்த வேண்டும். வீரமா முனிவர் இத்தாலியராக இருக்கலாம்; ஆனால் தமிழ் படித்து எழுத்துச் சீர் திருத்தம் செய்தாரென்றால். மொழியை அவர் வசப்படுத்தி விட்டார் என்று தான் பொருள். 'Realism' என்பதற்குப் பிரகிருதி வேதம் என ஒரு அகராதி பொருள் சொல்கின்றது. பொது மக்களுக்கு இது விளங்குமா? நேருவை மாணிக்கனார் எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார் ஒரு அறிஞர். மக்கள் மத்தியில் அது எடுபடுமோ என்று அவர் யோசிக்கவில்லை. சவாரித்தம்பர் இந்த வகையிலே மாறுபட்டவர்; வேறுபட்டவர். குடிகாரன் ஒருவர் குடித்து விட்டு வீட்டுக்கு வருகிறார். அவர் தனது தூசண வார்த்தைகளைக் கொட்டுவதற்கு முன்பு உச்சஸ்தானத் தொனியில் ரேடியோவை முடுக்கி விடுகிறாள். மனைவி. இது ஏன் என்பது வாசகர்கட்குத் தெரியாத ஒன்று அல்ல. இந்த இடங்களில் எல்லாம் சவாரித்தம்பர் சொல்லும் மொழி நடை செந்தமிழுக்குப் புறம்பான பிரதேச மொழி நடையாகவே இருக்கும். அந்தச் சம்பவம் வதிரியில் நடந்திருந்தால் அந்தப் பிரதேசத் தமிழையும், காத்தான்குடியில் நடந்திருந்தால் பிறிதொரு தமிழையும், நுவரேலியாவில் நடந்திருந்தால் மலையகத் தமிழிலும் பேசி மக்களின் பண்பாடு ஒழுக்கத்துடன் பேசக்கூடியவர் சவாரித்தம்பர். எனவே தான் மக்கள் அவரை ரசித்தார்கள். இரசிப்பது மாத்திரமன்றி அவரின் கருத்துக்களை மக்கள் கூட்டம் கூடிப் பேசினார்கள். அதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

காவியம் என்பது நெடுங்கதை. இந்த மின்சார உலகில் எவருக்குமே முழுமையாகப் படிக்க முடியாத ஒன்று அது?

எனவே சிறு சிறு துண்டுகளாகக் கூறுவதை மக்கள் படிக்க நேரம் உண்டு. இந்தச் சிறு சிறு துண்டுகளாக அமைப்பவை ஒரு கால கட்டத்தின் மிகப் பெரும் கருத்துப் பொக்கிசங்களாகப் பாதுகாக்கப்படல் வேண்டும். அந்த வகையிலே சவாரித்தம்பர் மகாத்தான சாதனை செய்திருக்கின்றார்.

ஓர் இலக்கியப் பாத்திரம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் அப் பாத்திரம் லட்சிய நோக்கத்திற்காக உழைத்து இருக்க வேண்டும்,

காதலிப்பதும்! ..
சாகடிப்பதும் !...
'' காதலிப்பது
எப்படி '' ? என்று...
கவிஞன்
கற்றுத் தந்தான்!
'' சாகடிப்பது
எப்படி '' ? என்று
காதலி
கற்றுத்தந்தாள்!

- மட்டுநகர் '' தங்கா தாசன் ''

---

## அப்துல் ரகுமானுடன் சிரியுங்கள்

டாக்டர்;- நாக்கை நீட்டுங்க... தலைவலி இருக்குமே... தூக்கம், பசி இருக்காதே. அடிக்கடி காச்சல், வயிற்றுவலி, இருமல், சளி எல்லாம் தொந்தரவு ....

வந்தவர்:- ஒன்றுமில்லீங்க... கண்டு கனகாலமென்று சும்மா உங்களை பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தன் டாக்டர்.

வா. அமர்

நண்பர்:- நேற்று வைத்தியரைப் பாக்கப் போயிருந்தேன்.

மற்றவர்:- என்ன வருத்தமெண்டு சொன்னார்.

நண்பர்:- அவருக்கும் இந்த நோய்தானாம் எண்டு பெரியகவலையோடு சொல்லி அழுதார்.

- வா. அமர்

ஆசிரியர்;- டேய் காலி சொல்லு... கல்வி உயர்ந்ததா? செல்வம் உயர்ந்ததா?

காலி:- கல்விச் செல்வம் உயர்ந்தது சேர்

வா. அமர்

---

## மறக்கமுடியாத மகுடியின் பதில்

கே: எப்போது பை நிறையப் பணம் இருக்கும் ?

ப: வாய் நிறையப் பொய் இருந்தால் பை நிறையப் பணம் இருக்கும்.

- மகுடியின் பதிலில் இருந்து -
நன்றி சிரித்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' எனச் சொல்லும் நக்கீரன் இலக்கியத்தில் உயர்வான இடத்தைப் பிடித்துக் கொண்டது ஏன்? தனது கொள்கையை விட்டுக் கொடுக்காமையால் தான்; சுடலை காத்த அரிச்சந்திரன் இலக்கியத்தில் இடம் பெற்றது ஏன் ?

1) தனது வாய்மையை விட்டுக் கொடுக்காமையால்
2) நெறி முறை வழுவாத மனைவியை வரித்துக் கொண்டதால்

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களின் பக்கம் எமது அனுதாபம் இருப்பது எதற்காக? அவர்கள் தருமம் என்ற வழியில் நடை போட்டமைக்காக.

கற்பு என்ற இலட்சிய நெறியை நெறிமுறையுடன் பாதுகாத்துக் கொண்டதால் தான் சிலப்பதிகாரம் என்ற காவியமே கண்ணகிக்குத் தலை வணங்குகின்றது

மாறி மாறி வரும் காலம் அதற்குப் போடு தாளம் என வாழ்ந்திடும் எந்தப் பாத்திரமுமே, நீதிக்குத் தலை வணங்காத எந்தப் படைப்புக்களுமே கால ஓட்டத்தால் அழியத்தக்கவை. முதலில் கண்டிப்பது. அது முடியாதுவிடின் எதிரிகளுடன் கூடிவிடுவது என்பது இலட்சியம் அற்றோர் கடைப்பிடிக்கும் வழிமுறைகள். அழகான ஆங்கிலக் கவிதை ஒன்று இதை நினைத்தால் எனக்கு ஞாபகம் வரும்.

He blamed and protested But, joined in the plan
He shared in the plunder and pitied the man

அதாவது :-

ஒருவர் ஒரு தீய திட்டத்தை நடாத்தியபோது எதிரியாக நின்றவர் தனது யோசனை தோல்வியடைந்தபோது எதிரியிடம் பங்கு பெற்றதும் அன்றி பாதிக்கப்பட்டவருக்காக அனுதாபமும் அடைந்தார், ஏன் இந்தப் பூர்வ பீடிகைகள் என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகின்றது. இப்போது விடை உங்களுக்குக் கிடைக்கும். சவாரித்தம்பர் என்ற இந்த இலக்கியப் பாத்திரம் பாதிக்கப்பட்டவர்கட்காக நீதி கேட்டு நெடிய பயணம் அமைத்தவரேயன்றி பங்கு கேட்டவர் அன்று.

சவாரித்தம்பர் மனிதசமுதாயம் எப்படியிருக்கவேண்டும்எனக்கனவு கண்டவரேயன்றி, இருக்கின்றசமுதாயத்தில் கிடைத்ததை அறுவடை செய்து கஞ்சி காய்ச்சிவர் அல்ல. எனவேதான் அவர் இலக்கியத்தில் இடம் பிடித்துக் கொண்டார். பக்குவப்படாத மனோ பாத்திரம் இல்லாதவர்கள் எந்த நாட்டைச் சுற்றி வந்தாலும் எத்தனை புத்தகங்கள் படித்தாலும் ஞானக் கொள் முதல் இல்லாத ஓட்டைப் பாத்திரங்களே சவாரித்தம்பர் பாத்திரமாக வரும் சின்னக் குட்டி பட்டதாரி அன்று; பண்டிதரும் அன்று.

ஆனால் நாட்டு நடப்புக்களை அறிந்த நல் மகன் அவர் கூறுவது எப்போதும் சரியாகவே இருந்தது சுருங்கச் சொல்லி விளங்கப்படுத்துவது அவரின் தலையாய பண்பு. அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என ''ரியூட்டோரியல்'' எழுதிய கிழவன் அவர் அல்ல, தனக்கு என்று அவரிடம் பல நல்ல கருத்துக்கள் இருந்தன. சொந்தக் கருத்துக்கள் இல்லாதவர்களைப் பற்றி ஓர் அறிஞர் கேலியாகக் குறிப்பிடுகையில் "The opinion of the best man he met his opinion" எனக் குறிப்பிட்டார்.

சவாரித்தம்பர் தனது கார்ட்டூன்களில் கடைசியாகக் குறிப்பிடுபவை தனது கருத்துக்களே...... அந்தக் கருத்துக்கள் அன்று சமூக விரோதிகளை இனம் காட்டியது. அதனால் தான் சவாரித்தம்பரைப் புரட்சிப் பாத்திரம் என்று கருதுகின்றோம்.

''நானா'' என்ற பாத்திரத்தைப் படைத்ததற்காக அன்று எமிலிஷோலா பரகசிக்கப்பட்டார். ஆனால் அந்தப் பாத்திரமே எமிலிஷாலர்வுக்கு உலக இலக்கியத்தில் உன்னதமான இடத்தைப் பிடித்துக் கொடுத்தது, சவாரித்தம்பர் என்ன புதிதாகச் சொல்லப் போகின்றார், என்று எதிர்பார்த்தவர்கட்கு நாள் தோறும் புதுக் கருத்துக்களை அவர் சொல்லிக் காட்டினார். அவர் சொல்லியது போன்று இன்று சொல்லுவார் இல்லை. அதனால் பத்திரிகையுலகம் களை இழந்து கிடக்கின்றது.

(தொடரும்)

குறிப்பு :- சில தவிர்க்க முடியாத காரணங்களால் சவாரித்தம்பரின் கார்ட்டூன்கள் பல இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் அதிக கார்ட்டூன்கள் இடம்பெறும். ஆசிரியர்

## பாடும் காதலர்



காதலன் :- நீல வான் வெளியில்
நெஞ்சிடை வெளியிலும்
கருமை இருளிலும்
காதல் கொடி உன்
கனா தான் கண்ணே!

காதலி :- பாடும் பொருளிலெல்லாம்
பாசம் தெரியவில்லை
பாவை என் சொத்து சுகம்
பார்த்தே பாட்டு வருது !

காதலன் :- ?.. ........

- அமிர்ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொப்பியடித்த பக்கம்

# பப்பா பப்பா மன்னிப்பாய்!

போப் அலெக்சாந்தர் ஒரு புகழ் மிக்க ஆங்கிலக் கவிஞர். அவர் தமது ஐந்தாவது வயதிலேயே கவி பாடத் தொடங்கிவிட்டார். அவருடைய இளம் பராயத்தில் அவர் என்ன கேட்டாலும், கவிகளாலேயே பதிலளிப்பார். அவர் சுவை மிக்க பாட்டுக்களைப் பாடியபோதும் தருணமறிந்து பாடாததால் அவரது போக்கு எல்லோருக்கும், குறிப்பாக அவரது தந்தையாருக்கு ஒரு தீராத தலையிடியாயிருந்தது பாடாதே பாடாதே எனத் தன்னால் முடிந்தளவு மைந்தனை எச்சரித்தார் தந்தையார். ஆனால் தனயன் தந்தையின் புத்திமதியை லட்சியப்படுத்தவில்லை. ஒரு நாள் அன்பு மைந்தனை அழைத்து, ஒரு வேலையைச் செய்யும்படி கூறினார் தந்தையார். அலுப்புற்றிருந்த தன் கவிதையிலேயே பதில் கூறினான். வேலை செய்யாததனாலும் தான் பாடாதே என்று கூறியும் மீண்டும் பாடியதாலும் மகன் மீது அடக்க முடியாத கோபங் கொண்டார். தந்தை 'பாடுவாயா' என்று கேட்டுக் கொண்டே ஐந்து விரல்களையும் முதுகிற் பொறித்துவிட்டார். துக்கம் தொண்டையை அடைக்க, அடியைப் பொறுக்க முடியாமல் மெய் அதிரக் கண்ணீர் சொரிந்துகொண்டே

"Pappa Pappa pity take
No. more verses shall I make"

(பப்பா பப்பா மன்னிப்பாய்; பாட்டொன்றும் இனி மேற் பாடேனே) என அழகாக அழுதவண்ணமே பாடினான். தந்தையின் முகத்தில் அசடு வழிந்தது

கு. குமரேஸ்வரன் - நன்றி சிரித்திரன் 1961

நெல்லியடி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

கணபதி: அவன் யானைக் கட்சியடா ?
சுமபதி: ஓம், அவன் யானைக் கட்சிதான். அதுசரி நீ எப்படி அவன் யானைக் கட்சியென்று சொல்வாய்
கணபதி; இல்ல... அவன் கொழுத்திருக்கான் அதான்.
சுமபதி: ????????!

- மசூத் அஹமத் -

டீச்சர்: கமலன், இது என்னுடைய பேனை. இப்படியொரு வசனம் சொல்லு பார்க்கலாம்.
கமலன்: இது டீச்சருடைய சட்டை ஹி . ஹி ..
டீச்சர்: ???

- மசூர் அஹமத்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

அழகான முடிவுப் போட்டியில் பரிசுபெற்ற ஆரையம்பதி செ. தமிழ்ச்செல்வியின் கதை அடுத்த இதழில் இடம்பெறும்.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

# கடன் சோடிகள்

- இராவணன் -



## கடன் படாத சிரிப்பு

1967 ம் ஆண்டில் உத்தர பிரதேச அமைச்சராக இருந்த கோவிந்தன், வெல்லப்பன் அன்னிய கடன்களில் இருந்து இந்தியா விடுபட வேண்டும். எனக் குறிப்பிட்டார்.

திரு. ஜி. ஜி. பட்டேல் கடன் உதவிகோரி வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். அவரது வெளிநாட்டு விஜயம் பற்றி விசாரித்த தந்தையார் அவர் கடன் உதவி கேட்கச் செல்கின்றார் என்பதை உணர்ந்தார். அவர் பின் வருமாறு கூறினார். "நான் இது வரை நீ ஏதோ சிறந்த சேவை செய்வதற்காக வெளிநாடு செல்கின்றாய் என நினைத்தேன். நீ வெளிநாட்டுக்குக் கடன் கேட்கச் செல்வாய் என்றால் அது பெரும் வெட்கக்கேடு; வேலையை உடன் ராஜினாமாச் செய் என்றார்.

## கடன் பட்ட சிரிப்பு

இன்று உலக நாடுகள் சகலதுமே உலக வங்கியிடமும் சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன் படவே செய்கின்றன. இதற்கு நாம் ஒன்றும் விதிவிலக்கு அல்ல. உலகு வங்கியிடம் இருந்து இந்தியா பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் 4.5.% வட்டிக்கே கடன்படுகின்றன. நாமோ 2.5% வட்டிக்கே கடன்படுகின்றோம்.

- அமைச்சர் ஹமீது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்திரள் வாசகர்களே..... எமது சிரிப்புச் சஞ்சிகையை இலங்கை பூராவும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். சுவைத்திரள் கிடைக்கும் இடங்கள்.

1) மகிந்தாஸ் இல 27, சவுத்லேன் பதுளை

2) பராசக்தி ஏஜன்சீஸ், பண்டாரவளை

3) S. தர்மராஜா (அகளங்கன்) 9 கரப்பங்காடு வவுனியா

4) ஜே. எம். மஃரூப் மில்க் பார் 78, சுப்பர்மார்க்கட் நாவலப்பிட்டி.

5) திக்குவல்லைக்கமால் 191 B அத்துலுகம பண்டாரகம

6) ராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டல், கோட்டை கொழும்பு

7) லஷ்மி பவான் கோட்டை கொழும்பு

8) எஸ். எஸ். முத்துராஜ் ராதிகாஸ் இல. 1 புதிய கட்டிடம் ஹட்டன்

9) சவுத் ஏசியன் புக் சென்ரர் 3 ம் மாடி சுப்பர் மார்க்கெட் கொழும்பு - 11

10) பூபாலசிங்கம் புத்தகசாலை 340. செட்டியார் தெரு கொழும்பு

11) இன்டர்மொட் புத்தகசாலை 250. காலிவீதி கொழும்பு 06

12) நஜ்மாஸ் No. 07 மொடல் சொப், நுவரேலியா

13) நியூ ராஜேஸ்வரி பவன் 78. மெயின் வீதி மாத்தளை

14) முருகன், புத்தகசாலை கல்முனை.

15) பாவா நியூஸ் ஏஜன்ட் மருதமுனை

16) கே. கே. மதிவதனன் கச்சேரி திருகோணமலை

17) எஸ். எல் எம் ஹினிபா, ஓட்டமாவடி

18) டாக்டர் R வில்வராஜ், பெரியகல்லாறு

19) N. பிரேம்ராஜ் 527, நுவரேலியா றோட், புசல்லாவை

20) கலைவாணி புக் சென்ரர் கண்டி

21) வேலவன் ஸ்ரோர்ஸ், களுவாஞ்சிக்குடி

22) எஸ். பி வீடியோ விசன் 421 காலி வீதி, பம்பலப்பிட்டி

23) அப்கோ சோயா கிறீம் ஹவுஸ் இல. 5 மிக்கேல் றோட் கொள்ளுப்பிட்டி.

வெளிநாட்டு விலாசங்கள் அடுத்த இதழில் இடம் பெறும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
CHUNDIKULI BRANCH LIBRARY


இனிப்பான செய்தி இதோ !

ஆம்,

தலைநகரில் சிறப்புப் பெற்ற,
சுவை பல கொண்ட

# ALTA
# Toffees

தரும் அரிய பல பரிசுகள்

முதல் 1500 பக்கட்டுக்களுக்கு
( கறுப்பு - வெள்ளை 14" T. V )

மேலதிக 750 பக்கட்டுக்களுக்கு
( ஓட்டமட்டிக் கமரா )

தொடரும் 500 பக்கட்டுக்களுக்கு
(றேடியோ செற்)

அடுத்த 250 பக்கட்டுக்களுக்கு
( சுவர் மணிக்கூடு )

பின்தொடரும் 100 பக்கட்டுக்களுக்கு
( கிளாஸ் செற் )

மேலதிக 50 பக்கட்டுக்களுக்கு
( ... ரீ சேட் )

இறுதி 25 பக்கட்டுக்களுக்கு
( அற்புத கிளாஸ் )

அத்துடன் ஒவ்வொரு பக்கட்டினுள் உள்ள காட்களும் ரூ 2/- விதம் பெறப்படும்

# ALTA SWEETS & TOFFEES

வாங்கி அரிய பல பரிசுகளைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

**ALTA** ரொபீஸ் பெறும் இடங்கள் :-

புவனா ஸ்ரோர்ஸ்
திருமலை வீதி, மட்டுநகர்.

வினாயகா ஸ்ரோர்ஸ்
களுவாஞ்சிக்குடி.

Rajeswary Stores
General Merchants
Commission Agents.
Distributors for
Ceylon Tobacco Company Ltd.
T. P. 065 - 2035. 2945

சிலாஜ் ஸ்ரோர்ஸ்
புதூர்.


PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

பூச்சஞ்சிகை 105/1 வசிக்கும் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் அவர்களிற்காக, தொகுப்பாசிரியர் மட்டூர்ராம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஓவியர் ஸ்ரீகோவிந்த். அச்சுப்பதிப்பு: வளர்மதி அச்சகம். இல. 28, லொயிட்ஸ் அவனியூ. மட்டக்களப்பு. சுவடிக்கூடத் திணைக்களத்தில் சஞ்சிகையாக பதிவு செய்யப்பட்டது. பதிவிலக்கம் Registered as a Newspaper in Sri Lanka. RBN / 4 / 3 / 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org